KEMENTERIAN PENDIDIKAN

KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH (KSSM)

BUKU PANDUAN TATABAHASA, CEYYUL DAN MOZHIYANI (SMK)

KELAS PERALIHAN – TINGKATAN 5

இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான வழிகாட்டி நூல் (இடைநிலைப்பள்ளி)

புகுமுக வகுப்பு – படிவம் 5

BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KEMENTERIAN PENDIDIKAN

KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH (KSSM)

BUKU PANDUAN TATABAHASA, CEYYUL DAN MOZHIYANI (SMK)
KELAS PERALIHAN – TINGKATAN 5

இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான வழிகாட்டி நூல் (இடைநிலைப்பள்ளி)
புகுமுக வகுப்பு – படிவம் 5

BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA
2022

Terbitan 2022

© Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia, Aras 4, 6-8, Blok E9, Parcel E, Kompleks Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

ISBN: 978-967-420-652-9

Terbitan:

Bahagian Pembangunan Kurikulum

Kementerian Pendidikan Malaysia

Aras 4, 6-8, Blok E9, Parcel E

Kompleks Pentadbiran Kerajaan Persekutuan

62604 Putrajaya

பொருளடக்கம்

ருக்குன் நெகாரா		v
தேசியக் கல்வித் தத்துவம்		vi
அணிந்துரை		vii
முன்னுரை		ix
பங்களித்தவர்கள் பெயர்ப்பட்டியல்		xi
இலக்கணம்		
1.0	எழுத்தியல்	1
2.0	சொல்லியல்	6
3.0	புணரியல்	14
4.0	வலிமிகும் இடங்கள்	20
5.0	வலிமிகா இடங்கள்	23
6.0	வாக்கிய வகைகள்	26
7.0	சொற்றொடர்/ தொடர்	29
செய்யுள்		
1.0	திருக்குறள்	33
2.0	பல்வகைச் செய்யுள்	39
மொழியணி		
1.0	இரட்டைக்கிளவி	46
2.0	இணைமொழி	47
3.0	உவமைத்தொடர்	49
4.0	மரபுத்தொடர்	52
5.0	பழமொழி	53
மேற்கோள் நூல்கள்		58

ருக்குன் நெகாரா

உறுதியாக, நம் மலேசிய நாடானது பின்வருவனவற்றை அடைய இலட்சியமாகக் கொண்டுள்ளது:
அனைத்துச் சமூகங்களுக்கிடையில் அணுக்கமான ஒற்றுமையை ஏற்படுத்துதல்;
ஒரே ஜனநாயக வாழ்க்கை முறையைப் பேணுதல்;
நாட்டின் சுபிட்சத்தை நியாயமாகவும் நடுநிலையாகவும் பகிர்ந்து கொள்ளும் சமுதாயத்தை உருவாக்குதல்;
பல்லின மக்களின் பல்வித பாரம்பரியமும் பண்பாடும் சுதந்திரமாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்;
அறிவியலையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான சமுதாயத்தை உருவாக்குதல்;

ஆகையால், மலேசிய மக்களாகிய நாங்கள், மேற்கூறிய இலட்சியங்களை அடைய பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் எங்களின் முழுச் சக்தியையும் முயற்சியையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவோம் என உறுதிப் பிரமாணம் செய்கிறோம்:

இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்
அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

தேசியக் கல்வித் தத்துவம்

“மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்”

மூலம்: கல்விச் சட்டம் 1996 (சட்டம் 550)

KATA PENGANTAR

Tahniah dan syabas diucapkan kepada Unit Bahasa Tamil, Sektor Bahasa dan Kesusasteraan, Bahagian Pembangunan Kurikulum (BPK) yang telah menghasilkan Buku Panduan Tatabahasa, Ceyyul dan Mozhiyani. Buku panduan ini meliputi aspek tatabahasa ceyyul dan mozhiyani yang terkandung dalam Dokumen Standard Kurikulum dan Pentaksiran (DSKP).

Pada masa ini terdapat banyak tafsiran yang berbeza dalam buku tatabahasa dan ceyyul yang ada di pasaran. Bagi mengatasi masalah ini, pihak Unit Bahasa Tamil, BPK telah menyelaras dan memberikan penerangan yang jelas dan tepat kepada aspek tatabahasa, ceyyul dan mozhiyani dengan contoh yang releven. Definisi dan maksud ceyyul dan mozhiyani yang terdapat dalam DSKP juga telah diseragamkan. Keseragaman ini amat penting bagi mengelakkan sebarang keraguan dalam kalangan guru dan murid. Adalah diharapkan buku ini dapat membantu guru dalam proses pengajaran dan pembelajaran. Selain menjadi sumber rujukan utama untuk guru dan murid, buku panduan ini juga akan menjadi bahan rujukan kepada semua pihak yang berkepentingan di Kementerian Pendidikan Malaysia (KPM).

Saya mengucapkan setinggi-tinggi penghargaan dan terima kasih kepada semua ahli jawatankuasa penggubalan Buku Panduan Tatabahasa, Ceyyul dan Mozhiyani yang terdiri daripada pegawai Bahagian KPM, pegawai JPN, pensyarah universiti dan IPG serta guru yang telah memberi idea, sumbangan dan kepakaran dalam menjayakan penghasilan buku ini.

HAJI AZMAN BIN HAJI ADNAN
Pengarah
Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

முன்னுரை

இறைவனின் ஆசியோடு அனைவருக்கும் வணக்கம்.

கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் தமிழ்ப் பிரிவு, தமிழ்மொழிக் கலைத்திட்ட மற்றும் மதிப்பீட்டு ஆவணத்திலுள்ள இலக்கணம், செய்யுள், மொழியணி ஆகியவற்றிற்கான வழிகாட்டி நூலை வெளியீடு செய்துள்ளது. 2017ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலில் இலக்கணம், செய்யுள், மொழியணி ஆகியவற்றிற்கான விளக்கமும் உதாரணங்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஆசிரியர்கள் சிறந்த முறையில் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாணவர்கள் தங்களுடைய சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்நாட்டில் தமிழ்க்கல்வி தொடர்புடைய அனைவருக்கும், குறிப்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன் தரும் வகையில் இந்நூல் உருவாக்கம் பெற்றுள்ளது. கல்வியமைச்சின் பல பிரிவுகளைச் சார்ந்த தமிழ்மொழிக்கான உயர் அதிகாரிகள், மாநிலக் கல்வி இலாகா தமிழ்மொழி உதவி இயக்குநர்கள், பல்கலைக்கழக மற்றும் ஆசிரியர் கல்விக் கழக விரிவுரையாளர்கள், அனுபவமிக்க ஆசிரியர்கள் ஆகியோரின் உதவியுடனும் அயரா உழைப்பினாலும் இந்நூல் வெளியீடு காண்கிறது.

இந்நூல் சிறப்பான முறையில் செம்மை பெற்று வெளிவருவதற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கிய கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் இயக்குநர் அவர்களுக்கும் மொழித்துறைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு, இப்பணியைச் சிறப்பாக மேற்கொண்ட கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் தமிழ்ப்பிரிவு உதவி இயக்குநர்களுக்கும் கல்வியமைச்சின் பல பிரிவுகளைச் சார்ந்த தமிழ்மொழிக்கான உயர் அதிகாரிகளுக்கும் மாநிலக் கல்வி இலாகா தமிழ்மொழி உதவி இயக்குநர்களுக்கும் பல்கலைக்கழக மற்றும் ஆசிரியர் கல்விக் கழக விரிவுரையாளர்களுக்கும் நனிசிறந்த ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ்.என். ராமநாதன்

ராமநாதன் நாகரத்தினம்
தமிழ்ப்பிரிவுத் தலைவர்
கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு
மலேசியக் கல்வி அமைச்சு

JAWATANKUASA PEMBINAAN
BUKU PANDUAN TATABAHASA, CEYYUL DAN MOZHIYANI

Ketua Penasihat
Tn. Haji Azman bin Haji Adnan
Pengarah
Bahagian Pembangunan Kurikulum

Penasihat
Pn. Sarina binti Salim
Timbalan Pengarah
Sektor Bahasa dan Kesusasteraan
Bahagian Pembangunan Kurikulum

Pengerusi
En. Ramanathan a/l Nagarathinam
Ketua Penolong Pengarah
(Ketua Unit Bahasa Tamil)
Sektor Bahasa dan Kesusasteraan
Bahagian Pembangunan Kurikulum

Pengurus Projek
Pn. Usharani a/p Arumugam
Penolong Pengarah
Sektor Bahasa dan Kesusasteraan
Bahagian Pembangunan Kurikulum

Ahli Jawatankuasa

Prof. Madya Dr. Samikkanu Jabamoney Ishak Samuel
Jabatan Bahasa Moden
Fakulti Bahasa dan Komunikasi
Universiti Pendidikan Sultan Idris
Tanjung Malim
Perak

Prof. Madya Dr. Kartheges a/l Ponniah
Jabatan Bahasa Moden
Fakulti Bahasa dan Komunikasi
Universiti Pendidikan Sultan Idris
Tanjung Malim
Perak

En. Tamil Selvan a/l Perumal
Bahagian Sumber dan Teknologi Pendidikan
Putrajaya

En. Munusamy a/l Subramaniam
Lembaga Peperiksaan
Putrajaya

En. Kamala Nathan a/l Nakar Salapan
Jemaah Nazir Negeri Melaka
Melaka

Dr. Kunaseelan a/l Subramaniam
Institut Pendidikan Guru
Kampus Ipoh
Perak

Dr. Duraimuthu a/l Subramaniam
Institut Pendidikan Guru
Kampus Tengku Ampuan Afzan
Pahang

En. Manimaran a/l Govindasamy
Institut Pendidikan Guru
Kampus Tuanku Bainun
Pulau Pinang

En. Saminathan a/l Govindasamy
Institut Pendidikan Guru
Kampus Tuanku Bainun
Pulau Pinang

En. Thamil Selvan a/l Perinan
Jabatan Pendidikan Negeri Kedah
Kedah

Cik Sagundala a/p Arokiam
Jabatan Pendidikan Negeri Pulau Pinang
Pulau Pinang

En. Chandrasegaran a/l Narasimaloo
Jabatan Pendidikan Negeri Perak
Perak

En. C. Murugayah a/l Chinniah @ Sinniah
Jabatan Pendidikan Negeri Melaka
Melaka

En. Haridass a/l Kantaswamy
Jabatan Pendidikan Negeri Melaka
Melaka

En. Pragash a/l Suwandram
Jabatan Pendidikan Negeri Johor
Johor

Pn. Rajam a/p Suppiah
SMK Bandar Enstek
Bandar Baru Enstek
Negeri Sembilan

En. Kumar a/l Durairajoo
SMK Seksyen 7
Shah Alam
Selangor

Pn. Vijayaletchumy a/p Pachayappan
SMK Segambut
Jalan Segambut
Kuala Lumpur

Pn. K. Pushpalatha a/p K. Krishnan
SMK Sultan Ibrahim
Kulai
Johor

En. Mail Vahanam a/l Arumugan
SMK Sungai Pelek
Sungai Pelek
Selangor

Pn. Puspavalli a/p Sathival
SMK Tok Perdana
Sitiawan
Perak

Pn. Chitra a/p Krishnan
SMK St. Paul
Seremban
Negeri Sembilan

Pn. Kalaivani a/p Kuppusamy
SMK Bukit Tinggi
Klang
Selangor

Pn. Thanaletchumy a/p Kupusamy
SMK Sungai KOB
Kulim
Kedah

Pn. Premila a/p Annamalai
SMK Seri Garing
Rawang
Selangor

இலக்கணம்

1.0 எழுத்தியல்

1.1 சுட்டெழுத்து **(புகுமுக வகுப்பு)**

- ஒன்றனைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துக்குச் சுட்டெழுத்து என்று பெயர். இது மொழிக்கு முதலிலே நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும்.
- சுட்டு எழுத்துகள் **மூன்று (அ, இ, உ)**.

i.	அ	-	சேய்மைச்சுட்டு (தொலைவு)	:	அங்கு, அவன், அது
ii.	இ	-	அண்மைச்சுட்டு (அருகில்)	:	இங்கு, இவன், இது
iii.	உ	-	சேய்மைச் சுட்டுக்கும் அண்மைச் சுட்டுக்கும் இடையே உள்ள பொருளைக் குறிக்கும்.	:	உங்கு, உவன்

குறிப்பு: அ, இ ஆகிய இரண்டு சுட்டுகள் மட்டுமே இன்றைய வழக்கில் உள்ளன. உ எனும் சுட்டு இன்றைய வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை.

- சுட்டு எழுத்துகள் **இருவகைப்படும்**. அவை: **(படிவம் 1)**

i. அகச்சுட்டு

- ஒரு சொல்லின் அகத்தே/ உள்ளேயே சுட்டெழுத்து அடங்கி வருமாயின் அஃது அகச்சுட்டாகும்.
- இவ்வகைச் சொல்லில் அடங்கியுள்ள சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டால் அது பொருள் சுட்டாது.

எ.கா:	அவன்	=	அ	+	வன்
	இவள்	=	இ	+	வள்
	உவன்	=	உ	+	வன்

ii. புறச்சுட்டு

- ஒரு சொல்லுக்குப் புறத்தே/ வெளியே சுட்டெழுத்து நின்று இயங்குவதால் அது புறச்சுட்டு என அழைக்கப்படும்.
- இவ்வகைச் சொல்லில் உள்ள சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டாலும் அது பொருள் சுட்டும்.

எ.கா:	அக்குதிரை	=	அ	+	குதிரை
	இப்புத்தகம்	=	இ	+	புத்தகம்
	உப்பையன்	=	உ	+	பையன்

1.2 வினாவெழுத்து (புகுமுக வகுப்பு)

- ❖ வினா எழுத்துகள் **ஐந்து**. அவை **எ, ஏ, யா, ஆ, ஓ** ஆகும்.
- ❖ இவை சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும்.

i. எ, யா - சொல்லின் முதல் எழுத்தாக வரும்.

எ.கா: **எ**து? **யா**து?

ii. ஆ, ஓ - சொல்லின் இறுதி எழுத்தாக வரும்.

எ.கா: அவ**னா**? (அவன் + ஆ)
அது**வோ**? (அது + ஓ)

iii. ஏ - சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.

எ.கா: **ஏ**ன் சென்றாய்?
அவன் செய்தது நல்லதுதா**னே**?
(நல்லது + தான் + ஏ)

- ❖ வினா எழுத்து அகவினா, புறவினா என **இருவகைப்படும்.** **(படிவம் 2)**

i. அகவினா

- சொல்லின் உள்ளிருந்து வினாப்பொருளைத் தருமாயின் அகவினா எனப்படும்.
- இந்தச் சொல்லில் இருந்து வினா எழுத்தைப் பிரிக்க முடியாது.

எ.கா: யார்? ஏன்? எப்படி?

ii. புறவினா

- சொல்லின் வெளியே இருந்து வினாப்பொருளைத் தருமாயின் புறவினா எனப்படும்.
- இந்தச் சொல்லில் இருந்து வினா எழுத்தைப் பிரிக்க முடியும்.

எ.கா: அவனா = அவன் + ஆ
கள்வனோ = கள்வன் + ஓ
எப்பொருள் = எ + பொருள்

1.3 போலி **(படிவம் 3)**

❖ ஒரு சொல்லில் ஓரிடத்தில் ஓரெழுத்திற்குப் பதிலாக மற்றோர் எழுத்து வந்தாலும் பொருள் மாறாமல் இருப்பின் போலி எனப்படும்.

❖ போல வருவது போலி. போலி **மூன்று வகைப்படும்**. அவை: முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி ஆகும்.

1.3.1 முதற்போலி

❖ ஒரு சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து அதே பொருளை உணர்த்துமாயின் முதற்போலி எனப்படும்.

- **ந** கரத்திற்கு **ஞ** கரம் போலி
  எ.கா: **ந**யம் - **ஞ**யம்
  நாயிறு - **ஞா**யிறு

- **அ** கரத்திற்கு **ஐ** காரம் போலி
  எ.கா: **ம**யல் - **மை**யல்
  மயன் - **மை**யன்
  மஞ்சு - **மை**ஞ்சு

- **ஐ** காரத்திற்கு **அய்** போலி
  எ.கா: **ஐ**யர் - **அய்**யர்

- **ஔ** காரத்திற்கு **அவ்** போலி
  எ.கா: **ஔ**வை - **அவ்**வை

1.3.2 இடைப்போலி

❖ ஒரு சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து அதே பொருளை உணர்த்துமாயின் இடைப்போலி எனப்படும்.

- **ய** கரத்திற்குச் **ச** கரம் போலி
  எ.கா: நெ**ய**வு - நெ**ச**வு

- **ச** கரத்திற்கு **ய** கரம் போலி
  எ.கா: கு**ச**வன் - கு**ய**வன்

- **அ** கரத்திற்கு **ஐ** காரம் போலி
  எ.கா: அ**ம**ச்சு - அ**மை**ச்சு
  அ**ர**யன் - அ**ரை**யன்

1.3.3 கடைப்போலி

- ❖ ஒரு சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து அதே பொருளை உணர்த்துமாயின் கடைப்போலி எனப்படும்.

- **ம** கரத்திற்கு **ன** கரம் போலி
  எ.கா: அற**ம்** - அற**ன்**
  புற**ம்** - புற**ன்**

- **ல** கரத்திற்கு **ள** கரம் போலி
  எ.கா: மதி**ல்** - மதி**ள்**
  செதி**ல்** - செதி**ள்**

- **ல** கரத்திற்கு **ர** கரம் போலி
  எ.கா: குட**ல்** - குட**ர்**
  பந்த**ல்** - பந்த**ர்**
  சாம்ப**ல்** - சாம்ப**ர்**

1.4 குற்றியலுகரம் (படிவம் 4)

- ❖ வல்லின உகரங்கள் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வரும்பொழுது குறுகி ஒலிக்கும்.

  எ.கா: பாக்**கு** **பாய்ச்**சு பாட்**டு** வாத்**து** காப்**பு** பற்**று**

- ❖ குற்றியலுகரம் **ஆறு வகைப்படும்**.

எண்	வகை	விளக்கம்	எடுத்துக்காட்டு
1.	நெடில்தொடர்க் குற்றியலுகரம்	இஃது இரண்டே எழுத்துகளில் வரும். இதில் முதலெழுத்து நெட்டெழுத்தாக இருக்கும்.	பாகு சூது மாசு பாபு நாடு சாறு
2.	வன்தொடர்க் குற்றியலுகரம்	ஈற்றுக்கு அயல் எழுத்து வல்லின மெய்யாக (க், ச், ட், த், ப், ற்) இருக்கும்.	வாக்கு கூத்து அச்சு தப்பு பாட்டு கூற்று

3.	மென்தொடர்க் குற்றியலுகரம்	ஈற்றுக்கு அயல் எழுத்து மெல்லின மெய்யாக (ங், ஞ், ண், ந், ம், ன்) இருக்கும்.	பங்கு பந்து அஞ்சு அம்பு வண்டு கன்று
4.	இடைத்தொடர்க் குற்றியலுகரம்	ஈற்றுக்கு அயல் எழுத்து இடையின மெய்யாக (ய், ர், ல், வ், ழ், ள்) வரும்.	கொய்து மார்பு சால்பு போழ்து தெள்கு (ஒருவகைப்பூச்சி)
5.	உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்	ஈற்றுக்கு அயல் எழுத்து உயிர்மெய் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றாக வரும். எ.கா : அ **ழ** கு ↓ ழ் + அ (உயிரெழுத்து)	முதுகு விருது கரடு உருபு பரிசு கயிறு
6.	ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்	ஈற்றுக்கு அயல் எழுத்து ஆய்த எழுத்தாக வரும்.	எஃகு அஃது கஃசு (காற்பலம் என்ற எடை அளவு)

1.5 முற்றியலுகரம் (படிவம் 5)

❖ எல்லா உகரங்களும் (கு, சு, டு, து, பு, று, ஙு, ஞு, ணு, நு, மு, னு, யு, ரு, லு, வு, ழு, ளு) **தனித்து முழுமையாக ஒலிக்கும் போது** முற்றியலுகரங்களாகும்.

- **தனிக்குறிலை அடுத்து** வருகின்ற வல்லின உகரம் முற்றியலுகரமாகும்.

  எ.கா: நடு, விடு, உறு, பொது, பசு, படு

- சொல்லின் இறுதியில் வருகின்ற **மெல்லின, இடையின** உகரங்கள் முற்றியலுகரங்களாகும்.

  எ.கா: அணு, விம்மு, உரு, பளு, விழு, கதவு, தாழ்வு

- **சொல்லின் முதல் எழுத்தாக** வரும் உகரம் முற்றியலுகரம்.

  எ.கா: உலகம், குடல், புண், முன், துவர்ப்பு

2.0 சொல்லியல்

2.1 பெயர்ச்சொல்

2.1.1 வேற்றுமை (புகுமுக வகுப்பு)

- ❖ பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.
- ❖ வேற்றுமை **எட்டு வகைப்படும்**. அவை:

வகை	உருபு	எடுத்துக்காட்டு
முதலாம் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை)	உருபு இல்லை	- **முகிலன்** தேர்வு எழுதினான்.
இரண்டாம் வேற்றுமை	ஐ	- அம்மா **முகிலனைப்** பாராட்டினார்.
மூன்றாம் வேற்றுமை	ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்	- கோயில் **முகிலனால்** கட்டப்பட்டது. - தம்பி **முகிலனோடு** கடைக்குச் சென்றான்.
நான்காம் வேற்றுமை	கு	- **முகிலனுக்குப்** பதவி உயர்வு கிடைத்தது.
ஐந்தாம் வேற்றுமை	இன், இருந்து, இல், நின்று	- முகிலன் **வீட்டிலிருந்து** புறப்பட்டான். - **முகிலனில்** சிறந்தவன் அகிலன். - பழம் **மரத்தினின்று** விழுந்தது.
ஆறாம் வேற்றுமை	அது, உடைய	- **முகிலனது** புத்தகம் கிடைத்துவிட்டது. - **முகிலனுடைய** வீடு அழகாக இருக்கும்.
ஏழாம் வேற்றுமை	இல், இடம், பால், கண்	- **முகிலனிடம்** நற்பண்புகள் இருக்கின்றன. - **முகிலன்பால்** அன்பு கொள்க. - முகிலன் **பள்ளியில்** படித்தான். - **அவன்கண்** நட்பு கொண்டான்.
எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)	உருபு இல்லை (விளித்தல் / அழைத்தல்)	- **முகிலா**! இங்கே வா.

2.1.2 இடுகுறிப்பெயர் (படிவம் 1)

❖ ஒரு பொருளுக்கு ஏதொரு காரணமுமின்றித் தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர்ச்சொல் இடுகுறிப்பெயர் எனப்படும்.

எ.கா: மண், கல், நீர், புல்

2.1.3 காரணப்பெயர்

❖ ஒரு பொருளுக்குக் காரணத்தோடு இடப்பட்ட பெயர்ச்சொல் காரணப்பெயர் ஆகும்.

எ.கா: பறவை, நாற்காலி, வானூர்தி, காற்றாடி

2.1.4 தமிழ்ச் சொற்கள் இலக்கிய அடிப்படையில் **நான்கு வகைப்படும்**. **(படிவம் 2)** அவை:

- **இயற்சொல்**
- **திசைச்சொல்**
- **திரிசொல்**
- **வடசொல்**

i. இயற்சொல்

❖ தொன்று தொட்டு தமிழ் மக்களிடையே இயல்பாக வழங்கி வருகின்ற சொற்கள் இயற்சொற்களாகும்.

எ.கா: பொன், கல், மரம், ஓடினான், பயின்றான்

ii. திசைச்சொல்

❖ பல திசைகளிலிருந்து தமிழ்மொழியில் வந்து கலந்த பிற மொழி சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

எ.கா:

ஆங்கிலம்	**கன்னடம்**	**அரபு**	**தெலுங்கு**
பென்சில்	அக்கடா	அபின்	அப்பட்டம்
ரப்பர்	அக்கறை	பாக்கி	ஆஸ்தி
பேனா	கோசரம்	ஆபத்து	
	கெட்டியாக		

இந்துஸ்தானி	**போர்த்துகீசியம்**	**பாரசீகம்**
குல்லா	அலமாரி	அலாதி
குஷி	சாவி	கம்மி
இலாகா	ஜன்னல்	கிஸ்தி

iii. திரிசொல்

❖ கல்லாதவரால் பொருள் உணர முடியாததும் கற்றவர்க்கே விளங்கக் கூடியதுமான சொல்லே திரிசொல் எனப்படும். ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களாகவும் பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகவும் திரிசொல் அமைந்திருக்கும்.
எ.கா: கிள்ளை (கிளி), படர்ந்தான் (நீங்கினான்),
நௌவி (மான்), மஞ்ஞை (மயில்)

❖ ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள்
எ.கா: கிள்ளை - கிளி, அஞ்சுகம், தத்தை

❖ பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்
எ.கா: மதி - நிலவு
- அறிவு
- மதித்தல்

iv. வடசொல்

❖ சமஸ்கிருத மொழியின் சொல் தமிழில் வந்து வழங்குவது வடசொல் எனப்படும்.
❖ வடசொல், வடமொழிக்கும் தமிழுக்கும் உரிய பொதுவான ஒலிகளால் தமிழில் வழங்குவதாகும்.
❖ வடசொல் **இரண்டு வகைப்படும்**.

- **தற்சமம்** - வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான எழுத்தொலிகளால் அமைந்த வடசொல் தமிழில் வந்து வழங்குவது தற்சம வடசொல்லாகும்.

  எ.கா: கமலம், அனுபவம், நியாயம்

- **தற்பவம்** - வடமொழிக்குரிய சிறப்பெழுத்துகளாலும் இரு மொழிகளுக்கு உரிய பொது எழுத்துகளாலும் அமைந்த வடசொல் தற்பவ வடசொல். வடசொற்களைத் தமிழில் எழுதும் பொழுது தமிழின் இனிமைக்கு ஏற்றவாறு சில வடமொழி எழுத்துகளுக்கு ஈடாகத் தமிழெழுத்தை எழுதுவது வழக்கம்.

  எ.கா:

வருஷம்	-	வரு**ட**ம்
மீனாக்ஷி	-	மீனா**ட்சி**
ஜலம்	-	**ச**லம்
ஹனுமன்	-	**அ**னுமன்
விவாஹம்	-	விவா**க**ம்

2.1.5 ஆகுபெயர் (படிவம் 4)

- ஒரு பொருளின் பெயர் அதனைக் குறிக்காமல், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவது ஆகுபெயர் எனப்படும்.
- ஆகுபெயர் **ஆறு வகைப்படும்**.

i. **பொருளாகு பெயர்**
ஒரு முழுப்பொருளின் பெயர் அதற்கே உரிய பொருளைக் குறிக்காது, அதன் சினையை மட்டும் குறித்து வருவது பொருளாகு பெயராகும்.

எ.கா: **தாமரை** மலர்ந்தது
பூசணிச் சாம்பார்
வாழைக் கறி (வாழைக் கறி எனும் தொடரில் வாழை என்ற சொல் கிழங்கு, தண்டு, இலை, பூ, காய் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கின்றது. ஆனால், வாழைக் கறி எனும் தொடர் வாழையையொட்டிய அனைத்தையும் குறிக்காமல், அதன் சினையாகிய காயை மட்டும் குறிக்கின்றது).

ii. **இடவாகு பெயர்**
ஓரிடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்குப் பெயராகி வருவது இடவாகு பெயராகும்.

எ.கா: **மலேசியா** வென்றது
நாடு போற்றியது
உலகம் அழுதது

iii. **காலவாகு பெயர்**
ஒரு காலத்தின் பெயர், அக்காலத்தில் செய்யப்படுகின்ற செயல் அல்லது தன்மையைக் குறிப்பது காலவாகு பெயராகும்.

எ.கா: **கார்** அறுத்தான்
கார்த்திகை மலர்ந்தது

iv. **சினையாகு பெயர்**
ஒரு சினையின் பெயர் (ஒரு பொருளின் பகுதி அல்லது உறுப்பு) அதனோடு தொடர்புடைய ஒரு முழுப் பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயராகும்.

எ.கா: **தலைக்குப்** பத்து வெள்ளி கொடு
வெற்றிலை நட்டான்

v. **பண்பாகு பெயர்**

ஒரு பண்பின் பெயர் அப்பண்பினை உடைய பொருளுக்கு ஆகிவருவது பண்பாகு பெயராகும்.

எ.கா: **இனிப்பு** உண்டான்
அழுக்கைத் துவைத்தான்
நீலம் சூடினாள்

vi. **தொழிலாகு பெயர்**

ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு ஆகிவருவது தொழிலாகு பெயராகும்.

எ.கா: **வறுவல்** உண்டான் (வறுவல் என்பது தொழிற்பெயர். அத்தொழிலைக் குறிக்காது அத்தொழிலினின்றும் பிறந்த பொருளுக்கு ஆகி வந்தது.)
பொங்கல் வைத்தார் (பொங்கல் என்பது ஒரு தொழில். அத்தொழிலைக் குறிக்காது அத்தொழிலினின்றும் பிறந்த பொருளுக்கு ஆகி வந்தது).

2.2 வினைச்சொல்

2.2.1 குன்றியவினை, குன்றாவினை (படிவம் 1)

i. **குன்றியவினை**

- வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்காத வினைமுற்றைக் குன்றியவினை என்பர்.
- இவ்வினைகள் செயப்படுபொருளின் துணையில்லாமல் நிற்க வல்லவை.
- குன்றியவினையை ஏற்று வரும் வாக்கியங்களில் 'எதை', 'எவற்றை', 'யாரை' என்ற கேள்விகளுக்கு விடை வாரா.

எ.கா:

எழுவாய்	பயனிலை (குன்றியவினை)
குதிரை	கனைத்தது
பாவாணர்	மகிழ்ந்தார்

ii. குன்றாவினை

- வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்று வரும் வினைமுற்றைக் குன்றாவினை என்பர்.
- 'எதை', 'எவற்றை', 'யாரை' என்ற கேள்விகளுக்கு விடை கொடுக்கும் வினைமுற்று குன்றாவினையாகும்.

எ.கா:

எழுவாய்	**செயப்படுபொருள்**	**பயனிலை (குன்றாவினை)**
அறவாணர்	நூலகத்தைப்	பாதுகாத்தார்
யாழினி	வீணையை	மீட்டினாள்

(குறிப்பு: செயப்படுபொருள் தெளிவாக வெளிப்படுகிறது)

- சில வாக்கியங்களில் செயப்படுபொருள் மறைந்து, இல்லாதது போன்ற மயக்க நிலையைக் கொடுக்கும்.

எ.கா:

எழுவாய்	**பயனிலை (குன்றாவினை)**	
அறவாணர்	அழைத்தார்.	யாரை? - தம்பியை
பெருஞ்சித்திரனார்	எழுதினார்.	எதை? – நூலை

(குறிப்பு: செயப்படுபொருள் மறைந்துள்ளது)

2.2.2 உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை (படிவம் 3)

i. உடன்பாட்டுவினை

- ஒரு செயல் நடைபெறுவதைப் பற்றியும் நடைபெற்றதைப் பற்றியும் நடைபெறவிருப்பதைப் பற்றியும் கூறும் வினைச்சொல் உடன்பாட்டுவினை எனப்படும்.

ii. எதிர்மறைவினை

- ஒரு செயல் **நடைபெறாததைப்** பற்றிக் கூறும் வினைச்சொல் எதிர்மறைவினை எனப்படும்.

எ.கா:

1. அருள்மதி பள்ளிக்கு **வந்தாள்.** (உடன்பாட்டுவினை)
2. அருள்மதி பள்ளிக்கு **வந்திலள்/வரவில்லை.** (எதிர்மறைவினை)

1. மாடுகள் கொட்டகைக்கு **வந்தன.** (உடன்பாட்டுவினை)
2. மாடுகள் கொட்டகைக்கு **வந்தில/வரவில்லை.** (எதிர்மறைவினை)

உடன்பாட்டுவினை	எதிர்மறைவினை
1. படிப்பேன்	படியேன் / படிக்க மாட்டேன்
2. வந்தனர்	வந்திலர் / வரவில்லை
3. செய்தான்	செய்திலன் / செய்யவில்லை
4. நடுவாள்	நடாள் / நடமாட்டாள்
5. கண்டாய்	கண்டிலாய் / காணவில்லை
6. தின்றது	தின்றிலது / தின்னவில்லை
7. நடந்தன	நடந்தில / நடக்கவில்லை
8. ஓடினர்	ஓடிலர் / ஓடவில்லை
9. வணங்குவார்	வணங்கார் / வணங்கமாட்டார்
10. உறங்குவாள்	உறங்காள் / உறங்கமாட்டாள்

2.2.3 தன்வினை, பிறவினை (படிவம் 5)

i. **தன்வினை** - எழுவாய் தானே செய்யும் செயலைக் குறிப்பது தன்வினையாகும்.

ii. **பிறவினை** - எழுவாய் பிறரைக் கொண்டு செய்விக்கும் செயல் பிறவினையாகும்.

எ.கா:

தன்வினை	பிறவினை
தம்பி **படித்தான்.**	தம்பி **படிப்பித்தான்.**
தாத்தா **உண்டார்.**	தாத்தா **உண்பித்தார்.**
ஆசிரியர் கட்டுரை **எழுதினார்.**	ஆசிரியர் கட்டுரை **எழுதுவித்தார்.**

2.3 உரிச்சொல் (படிவம் 2)

- ❖ உரிச்சொல் என்பது பொருள்களின் குணம், தொழில் ஆகிய பண்புகளை உணர்த்தும்.
- ❖ உரிச்சொல் ஒரு பொருள் குறித்த பல சொற்களாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் இருக்கும்.
- ❖ உரிச்சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல் முன் அமைந்து அச்சொற்களுக்கு அணி (சிறப்பு) சேர்க்கும்.

i. ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி ஆகிய உரிச்சொற்கள் **மிகுதி** என்னும் ஒரே பொருளை உணர்த்தும்.

எ.கா: **சாலச்** சிறந்தது
உறு பொருள்
தவப் பெரிது
நனி நன்று
கூர் மதி
கழி பேருவகை

ii. பல பொருள் குறிக்கும் ஒரு சொல்.

எ.கா: **கடி** நகர் (காப்பு)
கடி நுனை (கூர்மை)
கடி மாலை (மணம்)
கடி மார்பன்(அழகு)
கடி மிளகு (காரம்)

3.0 புணரியல்

- இரண்டு சொற்கள் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சி.
- இவ்விரண்டு சொற்களில் முதல் சொல்லை நிலைமொழி என்றும் இரண்டாவது சொல்லை வருமொழி என்றும் குறிப்பிடுவர்.
- நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடப் புணர்வதே புணர்ச்சி.
- புணர்ச்சி **இருவகைப்படும்**. அவை:
  i. இயல்பு புணர்ச்சி
  ii. விகாரப் புணர்ச்சி

3.1 விகாரப் புணர்ச்சி

- இரு சொற்கள் புணரும்போது நிலைமொழியின் ஈற்றிலோ வருமொழியின் முதலிலோ **மாற்றங்கள் ஏற்பட்டால்** அது விகாரப் புணர்ச்சியாகும்.
- விகாரப் புணர்ச்சி **மூன்று வகைப்படும்.** அவை:
  i. தோன்றல் விகாரம்
  ii. திரிதல் விகாரம்
  iii. கெடுதல் விகாரம்

3.1.1 தோன்றல் விகாரம்

அ) உடம்படுமெய் **(படிவம் 1)**

நிலைமொழி ஈற்றில் உயிரொலி (உயிரெழுத்து) இருந்து **வருமொழி முதலில் ஏதாவது ஓர் உயிரெழுத்து** இருந்தால் அவை இயல்பாகப் புணர இயலா. அவ்விரு உயிர்களையும் உடம்படுத்துவதற்குத் (இணைப்பதற்கு) தோன்றும் மெய்யெழுத்தே உடம்படுமெய்யாகும்.

உடம்படுமெய் **இருவகைப்படும்**. அவை:

i. யகர உடம்படுமெய்
ii. வகர உடம்படுமெய்

i. யகர உடம்படுமெய் (ய்)

நிலைமொழி ஈற்றில் **இ, ஈ, ஐ** முதலிய உயிர் எழுத்துகள் வந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'ய'கர மெய் தோன்றும்.

எ.கா:
காலை + உணவு = காலை<u>யு</u>ணவு
கூலி + ஆள் = கூலி<u>யா</u>ள்

ii. வகர உடம்படுமெய் (வ்)

நிலைமொழி ஈற்றில் **இ, ஈ, ஐ அல்லாத மற்ற உயிரொலிகள்** இருந்து, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் ‘வ’கர மெய் தோன்றும்.

எ.கா:

மா + இலை = மா**வி**லை
பூ + அரும்பு = பூ**வ**ரும்பு

* **நிலைமொழி ஈற்றில் ஏகாரம் இருந்தால் வகர மெய் அல்லது யகர மெய் தோன்றும்.**

எ.கா:
பய**னே** + இல்லை = பயனே**யி**ல்லை
(ன் + ஏ) + இ
யி

தே + ஆரம் = தே**வா**ரம்
(த் + ஏ) + ஆ
வா

ஆ) சுட்டு + யகரம் (படிவம் 2)

எ.கா: அ + யானை = அ**வ்**யானை
இ + யாழ் = இ**வ்**யாழ்

இ) எகர வினா + யகரம்

எ.கா: எ + யானை = எ**வ்**யானை
எ + யாகம் = எவ்யாகம்

ஈ) தனிக்குறிலை அடுத்து மெய் வந்து, **வருமொழி உயிரெழுத்தில் (படிவம் 3)** தொடங்கினால் நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய் இரட்டிக்கும்.

எ.கா: கண் + இமை = க**ண்ணி**மை
மெய் + அடி = மெ**ய்ய**டி

3.1.2 திரிதல் விகாரம்

❖ நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது **ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்து வருவது** திரிதல் புணர்ச்சியாகும்.

அ) ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் (புகுமுக வகுப்பு)

- **ண் → ட் ஆகும்** (க்,ச்,ப் முன் மட்டும்)

எ.கா:	மண்	+	குடம்	=	ம<u>ட்</u>குடம்
	மண்	+	பாண்டம்	=	ம<u>ட்</u>பாண்டம்
	கண்	+	செவி	=	க<u>ட்</u>செவி

- **ன் → ற் ஆகும்** (க்,ச்,ப் முன் மட்டும்)

எ.கா:	பொன்	+	குடம்	=	பொ<u>ற்</u>குடம்
	பொன்	+	சரடு	=	பொ<u>ற்</u>சரடு
	தன்	+	காப்பு	=	த<u>ற்</u>காப்பு
	முன்	+	பகல்	=	மு<u>ற்</u>பகல்

- **ண் முன் த் → ட் ஆக மாறும்**

எ.கா:	மண்	+	தலம்	=	மண்<u>ட</u>லம்
	தண்	+	தமிழ்	=	தண்<u>ட</u>மிழ்

- **ன் முன் த் → ற் ஆக மாறும்**

எ.கா:	பொன்	+	தகடு	=	பொ<u>ற்ற</u>கடு
	பொன்	+	தோடு	=	பொ<u>ற்றோ</u>டு

ஆ) லகர, ளகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் (புகுமுக வகுப்பு)

- **ள் → ட் ஆகும்** (க்,ச்,ப் முன் மட்டும்)

எ.கா:	கள்	+	குடம்	=	க<u>ட்</u>குடம்
	முள்	+	செடி	=	மு<u>ட்</u>செடி
	நாள்	+	காட்டி	=	நா<u>ட்</u>காட்டி
	உள்	+	பூசல்	=	உ<u>ட்</u>பூசல்

- **ல் → ற் ஆகும்** (க்,ச்,ப் முன் மட்டும்)

எ.கா:	கால்	+	பந்து	=	காற்பந்து
	வேல்	+	படை	=	வேற்படை
	பால்	+	குடம்	=	பாற்குடம்

- **ல் முன் த் → ற் ஆகும்**

எ.கா:	கல்	+	தூண்	=	கற்றூண்
	நல்	+	தமிழ்	=	நற்றமிழ்

- **ள் முன் த் → ட் ஆகும்**

எ.கா:	முள்	+	தாள்	=	முட்டாள்
	உள்	+	துறை	=	உட்டுறை

இ) மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு புணரும்போது இன மெல்லெழுத்தாகத் திரியும். **(புகுமுக வகுப்பு & படிவம் 3)**

எ.கா:	மரம்	+	கண்டான்	=	மர**ங்**கண்டான்
	மரம்	+	சாய்ந்தது	=	மர**ஞ்**சாய்ந்தது
	வரம்	+	தா	=	வர**ந்**தா

3.1.2 கெடுதல் விகாரம்

அ) ‘மை’ ஈற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி **(படிவம் 3)**

நிலைமொழியில் உள்ள ‘மை’ ஈறும் வருமொழியில் உள்ள முதலும் புணரும் போது நிலைமொழியின் ‘மை’ ஈறு மறைந்து **(கெட்டு)** வருமொழி முதலுக்கேற்பத் **திரிந்தும் தோன்றியும்** வரும்.

எ.கா:	செம்மை	+	கோல்	=	செ**ங்**கோல்
	பசுமை	+	பயிர்	=	பசு**ம்**பயிர்
	சிறுமை	+	ஊர்	=	சி**ற்**றூர்
	தண்மை	+	நீர்	=	தண்**ணீ**ர்

ஆ) எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி **(படிவம் 4)**

- ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழி எண்ணுப்பெயருடன் ‘**பத்து**’ என்னும் வருமொழி இணைதல்.

எ.கா:	இரண்டு	+	பத்து	=	இருபது
	மூன்று	+	பத்து	=	முப்பது
	நான்கு	+	பத்து	=	நாற்பது
	ஐந்து	+	பத்து	=	ஐம்பது
	ஆறு	+	பத்து	=	அறுபது
	ஏழு	+	பத்து	=	எழுபது
	எட்டு	+	பத்து	=	எண்பது
	ஒன்பது	+	பத்து	=	தொண்ணூறு
	பத்து	+	பத்து	=	பப்பத்து

- ‘பத்து’ எனும் நிலைமொழியுடன் ஒன்று முதல் பத்து வரையிலான வருமொழி எண்ணுப்பெயர் இணைதல்.

எ.கா:	பத்து	+	ஒன்று	=	பதினொன்று
	பத்து	+	இரண்டு	=	பன்னிரண்டு
	பத்து	+	மூன்று	=	பதின்மூன்று
	பத்து	+	நான்கு	=	பதினான்கு
	பத்து	+	ஐந்து	=	பதினைந்து
	பத்து	+	ஆறு	=	பதினாறு
	பத்து	+	ஏழு	=	பதினேழு
	பத்து	+	எட்டு	=	பதினெட்டு
	பத்து	+	ஒன்பது	=	பத்தொன்பது
	பத்து	+	பத்து	=	பப்பத்து

- ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழியுடன் அதே வருமொழி எண்ணுப்பெயர் புணர்தல்.

எ.கா:	ஒன்று	+	ஒன்று	=	ஒவ்வொன்று
	இரண்டு	+	இரண்டு	=	இவ்விரண்டு
	மூன்று	+	மூன்று	=	மும்மூன்று
	நான்கு	+	நான்கு	=	நந்நான்கு
	ஐந்து	+	ஐந்து	=	ஐவைந்து
	ஆறு	+	ஆறு	=	அவ்வாறு
	ஏழு	+	ஏழு	=	எவ்வேழு
	எட்டு	+	எட்டு	=	எவ்வெட்டு
	ஒன்பது	+	ஒன்பது	=	ஒன்பதொன்பது
	பத்து	+	பத்து	=	பப்பத்து

இ) திசைப்பெயர்ப் புணர்ச்சி **(படிவம் 4)**

திசையைக் குறிக்கும் சொல்லைத் திசைப்பெயர் என்பர். அவ்வாறு திசைப்பெயரோடு வேறொரு திசைப்பெயரும் பிற சொல்லும் பின்வரும் முறையில் புணரும்.

எ.கா: வடக்கு	+	கிழக்கு	=	வடகிழக்கு
வடக்கு	+	மேற்கு	=	வடமேற்கு
தெற்கு	+	கிழக்கு	=	தென்கிழக்கு
தெற்கு	+	மேற்கு	=	தென்மேற்கு
கிழக்கு	+	நாடு	=	கீழ்நாடு / கீழை நாடு
மேற்கு	+	நாடு	=	மேனாடு / மேல்நாடு
கிழக்கு	+	திசை	=	கீழ்த்திசை
மேற்கு	+	திசை	=	மேற்றிசை / மேல்திசை
தெற்கு	+	நாடு	=	தென்னாடு

ஈ) வடமொழிச் சந்தி இலக்கணம் (வழக்குச் சொற்களுக்கு மட்டும்) **(படிவம் 5)**

வடமொழித் தொடர்களில் நிலைமொழியின் ஈற்றில் **குற்றொலி** அல்லது நெட்டொலி இருந்து, வருமொழி குற்றொலி அல்லது நெட்டொலியில் தொடங்கினால் **குற்றொலி** மறைந்து **நெட்டொலி** தோன்றும்.

- நிலைமொழி ஈற்றில் ‘அ/ஆ’ + ‘அ/ஆ’ = **‘ஆ’** தோன்றும்.

எ.கா: சர்வ	+	அதிகாரி	=	சர்**வா**திகாரி
குண	+	அதிசயம்	=	கு**ணா**திசயம்
வேத	+	ஆகமம்	=	வே**தா**கமம்
சேனா	+	அதிபதி	=	சே**னா**திபதி

- நிலைமொழி ஈற்றில் ‘அ/ஆ’ + ‘இ/ஈ’ = **‘ஏ’** தோன்றும்

எ.கா: ராஜ	+	இந்திரன்	=	ரா**ஜே**ந்திரன்
மகா	+	ஈஸ்வரன்	=	ம**கே**ஸ்வரன்
தேவ	+	இந்திரன்	=	தே**வே**ந்திரன்

- நிலைமொழி ஈற்றில் ‘அ/ஆ’ + ‘உ/ஊ’= **‘ஓ’** தோன்றும்

எ.கா: சூரிய	+	உதயம்	=	சூரி**யோ**தயம்
சக	+	உதரன்	=	ச**கோ**தரன்
ஞான	+	உதயம்	=	ஞா**னோ**தயம்

4.0 வலிமிகும் இடங்கள்

- ❖ சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.
- ❖ வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால்தான் வல்லினம் மிகும்.

குறிப்பு: **நிலைமொழி - முதலில் நிற்கும் சொல்**
வருமொழி - அடுத்து நிற்கும் சொல்

4.1 இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) க்குப்பின் க்,ச்,த்,ப் வரின் வலிமிகும். **(புகுமுக வகுப்பு)**

எ.கா: இராமனை	+	பார்	=	இராமனை**ப்** பார்
கையை	+	தட்டு	=	கையை**த்** தட்டு

4.2 நான்காம் வேற்றுமை உருபு (கு) க்குப்பின் க்,ச்,த்,ப் வரின் வலிமிகும். **(புகுமுக வகுப்பு)**

எ.கா: அவனுக்கு	+	சொல்	=	அவனுக்கு**ச்** சொல்
விலைக்கு	+	தந்தான்	=	விலைக்கு**த்** தந்தான்

4.3 அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும். **(புகுமுக வகுப்பு)**

எ.கா: அங்கு	+	படித்தான்	=	அங்கு**ப்** படித்தான்
இங்கு	+	கண்டான்	=	இங்கு**க்** கண்டான்
எங்கு	+	சென்றான்	=	எங்கு**ச்** சென்றான்?

4.4 அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும். **(புகுமுக வகுப்பு)**

எ.கா: அப்படி	+	சொல்	=	அப்படி**ச்** சொல்
இப்படி	+	பேசு	=	இப்படி**ப்** பேசு
எப்படி	+	கிடைத்தது	=	எப்படி**க்** கிடைத்தது?

4.5 அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும். **(புகுமுக வகுப்பு)**

எ.கா: அந்த	+	பையன்	=	அந்த**ப்** பையன்
இந்த	+	தலைவன்	=	இந்த**த்** தலைவன்
எந்த	+	குழந்தை	=	எந்த**க்** குழந்தை?

4.6 அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின்பின் வலிமிகும். **(படிவம் 1)**

எ.கா:	இத்துணை	+	சிறிய	=	இத்துணை**ச்** சிறிய
	அத்துணை	+	பெரிய	=	அத்துணை**ப்** பெரிய
	எத்துணை	+	கொடுமை	=	எத்துணை**க்** கொடுமை?

4.7 இனி, தனி, மற்ற என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும். **(படிவம் 1)**

எ.கா:	இனி	+	கொடு	=	இனி**க்** கொடு
	தனி	+	சொல்	=	தனி**ச்** சொல்
	மற்ற	+	தலைவர்	=	மற்ற**த்** தலைவர்

4.8 அரை, பாதி என்னும் எண்ணுப்பெயர்களின்பின் வலிமிகும். **(படிவம் 1)**

எ.கா:	பாதி	+	பணம்	=	பாதி**ப்** பணம்
	அரை	+	காசு	=	அரை**க்** காசு

4.9 'அ', 'இ' என்னும் சுட்டெழுத்தின் பின்னும் 'எ' என்ற வினா எழுத்தின் பின்னும் வலிமிகும். **(படிவம் 2)**

எ.கா:	அ	+	காட்சி	=	அ**க்**காட்சி
	இ	+	படம்	=	இ**ப்**படம்
	எ	+	சங்கம்	=	எ**ச்**சங்கம்?

4.10 தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரத்தின்பின் வலிமிகும். **(படிவம் 2)**

எ.கா:	கனா	+	கண்டான்	=	கனா**க்** கண்டான்
	பலா	+	பழம்	=	பலா**ப்** பழம்

4.11 அகர, இகர ஈற்று வினையெச்சங்களின்பின் வலிமிகும். **(படிவம் 3)**

எ.கா:	செய்ய	+	சொன்னான்	=	செய்ய**ச்** சொன்னான்
	ஆடி	+	பாடினாள்	=	ஆடி**ப்** பாடினாள்

4.12 ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வலிமிகும். **(படிவம் 4)**

எ.கா:	பேசா	+	பையன்	=	பேசா**ப்** பையன்
	ஓடா	+	குதிரை	=	ஓடா**க்** குதிரை

4.13 ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி அஃறிணையாக இருப்பின் வலிமிகும். **(படிவம் 4)**

எ.கா:	நாய்	+	குட்டி	=	நாய்**க்** குட்டி
	யானை	+	தந்தம்	=	யானை**த்** தந்தம்
	வண்டி	+	சக்கரம்	=	வண்டி**ச்** சக்கரம்

4.14 உவமைத்தொகையில் வலிமிகும். **(படிவம் 4)**

எ.கா:	மலை	+	தோள்	=	மலை**த்**தோள்
	மலர்	+	கை	=	மலர்**க்**கை

4.15 பண்புத்தொகையில் வலிமிகும். **(படிவம் 4)**

எ.கா:	வெள்ளை	+	தாள்	=	வெள்ளை**த்**தாள்
	சதுரம்	+	பலகை	=	சதுர**ப்**பலகை

4.16 இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வலிமிகும். **(படிவம் 4)**

எ.கா:	**சிறப்புப்பெயர்**		**பொதுப்பெயர்**		**பண்புத்தொகை**
	தை	+	திங்கள்	=	தை**த்**திங்கள்
	மல்லிகை	+	பூ	=	மல்லிகை**ப்**பூ

4.17 திரு, நடு, முழு, விழு, பொது, அணு போன்ற முற்றியலுகரச் சொற்களுக்குப்பின் வலிமிகும். **(படிவம் 5)**

எ.கா:	முழு	+	பாடல்	=	முழு**ப்**பாடல்
	நடு	+	தெரு	=	நடு**த்**தெரு

5.0 வலிமிகா இடங்கள்

❖ சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.

5.1 அங்கே, இங்கே, எங்கே என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது. **(புகுமுக வகுப்பு)**

எ.கா:	அங்கே	+	கொடு	=	அங்கே கொடு
	இங்கே	+	பார்	=	இங்கே பார்
	எங்கே	+	செல்கிறாய்	=	எங்கே செல்கிறாய்?

5.2 அத்தனை, இத்தனை, எத்தனை என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது. **(புகுமுக வகுப்பு)**

எ.கா:	அத்தனை	+	செடிகள்	=	அத்தனை செடிகள்
	இத்தனை	+	கடைகளா	=	இத்தனை கடைகளா?
	எத்தனை	+	பாடம்	=	எத்தனை பாடம்?

5.3 ன்று, ந்து, ண்டு, ய்து என்று முடியும் வினையெச்சங்களின்பின் வலிமிகாது. **(புகுமுக வகுப்பு)**

எ.கா:	சென்று	+	பார்த்தாள்	=	செ**ன்று** பார்த்தாள்
	அறிந்து	+	கொண்டார்	=	அறி**ந்து** கொண்டார்
	செய்து	+	காட்டினார்	=	செ**ய்து** காட்டினார்
	கொண்டு	+	சென்றான்	=	கொ**ண்டு** சென்றான்

5.4 மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஒடு, ஓடு ஆகியவற்றின்பின் வலிமிகாது. **(படிவம் 1)**

எ.கா:	புலவரொடு	+	பாடினான்	=	புலவரொடு பாடினான்
	தம்பியோடு	+	சென்றான்	=	தம்பியோடு சென்றான்

5.5 ஏது, யாது, யாவை என்னும் வினாச் சொற்களின்பின் வலிமிகாது. **(படிவம் 1)**

எ.கா:	ஏது	+	கண்டாய்	=	ஏது கண்டாய்?
	யாது	+	பயன்	=	யாது பயன்?
	யாவை	+	தந்தான்	=	யாவை தந்தான்?

5.6 ஐந்தாம் வேற்றுமை உருபுகளான இருந்து, நின்று என்பனவற்றின்பின் வலிமிகாது. **(படிவம் 2)**

எ.கா:	கூரையிலிருந்து	+	குதித்தான்	=	கூரையிலிருந்து குதித்தான்
	வீட்டினின்று	+	சென்றான்	=	வீட்டினின்று சென்றான்

5.7 ஆறாம் வேற்றுமை உருபுகளான அது, உடைய என்பனவற்றின்பின் வலிமிகாது. **(படிவம் 2)**

எ.கா:	பாலனது	+	கை	=	பாலனது கை
	என்னுடைய	+	தட்டு	=	என்னுடைய தட்டு

5.8 உயர்திணைப்பெயர், பொதுப்பெயர்களின்பின் வலிமிகாது. **(படிவம் 3)**

எ.கா:	தம்பி	+	சிறியவன்	=	தம்பி சிறியவன்
	பறவை	+	பறந்தது	=	பறவை பறந்தது

5.9 'ஆ', 'ஓ' என்னும் வினா எழுத்துகளின்பின் வலிமிகாது. **(படிவம் 3)**

எ.கா:	அவனா	+	சொன்னான்	=	அவனா சொன்னான்?
	அவனோ	+	கூறினான்	=	அவனோ கூறினான்?

5.10 இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகாது. **(படிவம் 4)**

எ.கா:	விறகு	+	கட்டினாள்	=	விறகு கட்டினாள்
	கனி	+	தின்றான்	=	கனி தின்றான்
	மாலை	+	சூடினாள்	=	மாலை சூடினாள்
	இலை	+	பறித்தாள்	=	இலை பறித்தாள்

(குறிப்பு: இத்தொடர் அமைப்புகளில் இரண்டாம் வேற்றுமை உருபான ஐ மறைந்துள்ளதால் இவை இரண்டாம் வேற்றுமைத்தொகையாகும்.)

5.11 ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி உயர்திணையாய் இருப்பின் வலிமிகாது. **(படிவம் 4)**

எ.கா:	தம்பி	+	சட்டை	=	தம்பி சட்டை
	குழந்தை	+	கை	=	குழந்தை கை

(குறிப்பு: இத்தொடர் அமைப்புகளில் ஆறாம் வேற்றுமை உருபுகளான அது, உடைய ஆகியவை மறைந்துள்ளதால் இவை ஆறாம் வேற்றுமைத்தொகையாகும்.)

5.12 உம்மைத்தொகையில் வலிமிகாது. **(படிவம் 4)**

தொகைச் சொல்லில் **உம்** என்னும் உருபு மறைந்திருப்பதால் உம்மைத்தொகை எனப்படும். அதில் வலிமிகாது.

எ.கா:

உம்மைத்தொடர்	**உம்மைத் தொகை**
செடியும் கொடியும்	செடிகொடி
காயும் கனியும்	காய்கனி
வெற்றியும் தோல்வியும்	வெற்றிதோல்வி
நன்மையும் தீமையும்	நன்மைதீமை

5.13 வினைத்தொகையில் வலிமிகாது. **(படிவம் 4)**

வினைச்சொல்லின் பகுதியும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து வருவதே வினைத்தொகையாகும்.

	வினையடி	+	**பெயர்**	=	**வினைத்தொகை**
எ.கா:	குடி	+	நீர்	=	குடிநீர்
	வீசு	+	தென்றல்	=	வீசுதென்றல்
	பாடு	+	பொருள்	=	பாடுபொருள்
	செய்	+	தொழில்	=	செய்தொழில்

5.14 எழுவாய்த் தொடரில் வலிமிகாது. **(படிவம் 5)**

எ.கா:	தாமரை	+	பூத்தது	=	தாமரை பூத்தது
	பூனை	+	பாய்ந்தது	=	பூனை பாய்ந்தது
	சேவல்	+	கூவியது	=	சேவல் கூவியது

5.15 விளித் தொடரில் வலிமிகாது. **(படிவம் 5)**

எ.கா:	தம்பீ	+	போ	=	தம்பீ போ
	இராமா	+	கேள்	=	இராமா கேள்
	அம்மா	+	கொடுங்கள்	=	அம்மா கொடுங்கள்

5.16 பெயரெச்சத்தின்பின் வலிமிகாது. **(படிவம் 5)**

எ.கா:	பார்த்த	+	படம்	=	பார்த்த படம்
	பறந்த	+	பறவை	=	பறந்த பறவை
	ஆடுகின்ற	+	பெண்	=	ஆடுகின்ற பெண்

6.0 வாக்கிய வகைகள்

❖ வாக்கியங்களைக் **கருத்து, அமைப்பு** எனும் அடிப்படையில் பிரிக்கலாம்.

6.1 **கருத்து** அடிப்படையில் **நான்கு வகை வாக்கியங்கள்** உள்ளன. அவை:

i. செய்தி வாக்கியம்
ii. வினா வாக்கியம்
iii. விழைவு வாக்கியம்
iv. உணர்ச்சி வாக்கியம்

6.1.1 விழைவு வாக்கியம் **(படிவம் 2)**

வேண்டுகோள், கட்டளை, சபித்தல், வாழ்த்துதல் ஆகிய அடிப்படையில் அமையும்.

எ.கா:
1. எனக்கு இந்நூலைத் தருக. (வேண்டுகோள்)
2. பாடம் படித்து வா. (கட்டளை)
3. ஒழிந்து போ! (சபித்தல்)
4. பல்லாண்டு வாழ்க! (வாழ்த்துதல்)

6.2 **அமைப்பு** அடிப்படையில் வாக்கியங்களை **மூவகையாகப்** பிரிக்கலாம்.

6.2.1 தனி வாக்கியம்

- ஓர் எழுவாய் அல்லது பல எழுவாய்கள் **ஒரே பயனிலையைப்** பெற்று வருவது தனி வாக்கியமாகும்.

எ.கா: 1. புத்தர் (எழுவாய்) அன்பைப் போதித்தார். (பயனிலை)

2. தென்னவனும் (எழுவாய்) பிரமிளாவும் (எழுவாய்) தங்கம் வென்றனர். (பயனிலை)

6.2.2 தொடர் வாக்கியம் (படிவம் 4)

- ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ **பல பயனிலைகளைக்** கொண்டு முடிவது தொடர் வாக்கியம்.

எழுவாய்

எ.கா: 1. **இளவேந்தன்** பாடங்களை முறையாகப் **படித்தான்**; தேர்வினைச் சிறப்பாகச் **செய்தான்**.

பயனிலை பயனிலை

எழுவாய் எழுவாய்

எ.கா: 2. **இளவேந்தனும் இளமாறனும்** பாடங்களை முறையாகப் **படித்தனர்**; தேர்வினைச் சிறப்பாகச் **செய்தனர்**.

பயனிலை பயனிலை

- ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் அதனால், இதனால், ஏனெனில், இருப்பினும் முதலிய இணைப்புச் சொற்களாலும் கருத்துத் தொடர்பாலும் இணைந்துவரின் அதுவும் தொடர் வாக்கியம் எனப்படும்.

எ.கா: நான் குறித்த நேரத்தில் வந்தேன்; **எனினும்**, குமாரனைக் காண முடியவில்லை.

இணைப்புச் சொல்

6.2.3 கலவை வாக்கியம் (படிவம் 4)

- ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களை அல்லது செய்திகளை ஒரே வாக்கியத்தில் தருவது கலவை வாக்கியம்.
- கலவை வாக்கியத்தில் ஒரு முதன்மை வாக்கியத்தைச் சார்ந்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்பு வாக்கியங்கள் இடம் பெறும்.
- சில கலவை வாக்கியங்கள் 'என்னும்', 'என்றும்' முதலிய சொற்களைக் கொண்டிருக்கும்.

எ.கா:

1. நாடு முன்னேற வேண்டும் என்றால், மக்கள் அயராது உழைக்க வேண்டும்.

முதன்மை வாக்கியம்	மக்கள் அயராது உழைக்க வேண்டும்.
சார்பு வாக்கியம்	நாடு முன்னேற வேண்டும்.

2. வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது என்றும், சிக்கல் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்றும் அறிஞர் அறிவுரை கூறுவர்.

முதன்மை வாக்கியம்	அறிஞர் அறிவுரை கூறுவர்.
சார்பு வாக்கியம்	1. வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது. 2. சிக்கல் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும்.

7.0 சொற்றொடர்/ தொடர்

- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்தால் சொற்றொடர் எனப்படும்.
- ❖ சொற்றொடர் **இருவகைப்படும்**. அவை:

  i. தொகைநிலைத் தொடர்
  ii. தொகாநிலைத் தொடர்

7.1 தொகைநிலைத் தொடர் **(படிவம் 4)**

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் இயங்கும் போது, இடையில் சொல்லோ உருபோ மறைந்து வருதல் தொகை எனப்படும்.

எ.கா: உணவு சாப்பிட்டான் - உண**வைச்** சாப்பிட்டான்
('ஐ' உருபு மறைந்துள்ளது)

செடி கொடி - செடி**யும்** கொடி**யும்**
('உம்' என்ற இடைச்சொல் மறைந்திருக்கிறது)

- தொகைகளின் வகைகள்:
  i. வேற்றுமைத்தொகை
  ii. வினைத்தொகை
  iii. பண்புத்தொகை
  iv. உவமைத்தொகை
  v. உம்மைத்தொகை

7.1.1 வேற்றுமைத்தொகை **(படிவம் 4)**

- **வேற்றுமை உருபு** மறைந்துள்ள சொற்றொடர் வேற்றுமைத் தொகையாகும்.

தொகை	வேற்றுமைத் தொடர்	விளக்கம்
மொழி கற்றான்	மொழியைக் கற்றான்	'ஐ'- 2ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது
தலை வணங்கு	தலையால் வணங்கு	'ஆல்'- 3ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது
கல்லூரி சென்றான்	கல்லூரிக்குச் சென்றான்	'கு' - 4ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது
துன்பம் நீங்கினான்	துன்பத்திலிருந்து நீங்கினான்	'இருந்து' - 5ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது
என் வீடு	என்னுடைய வீடு	'உடைய' - 6ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது
வீடு புகுந்தான்	வீட்டில் புகுந்தான்	'இல்' - 7ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது

- **வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை**
  வேற்றுமை உருபோடு வேறொரு சொல்லும் மறைந்திருந்தால் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை எனப்படும்.

தொகை	தொடர்	விளக்கம்
காய்கறிக்கடை	காய்கறியை விற்கும் கடை	'ஐ' எனும் 2ஆம் வேற்றுமை உருபும் 'விற்கும்' எனும் வேறொரு சொல்லும் மறைந்துள்ளன.
பொற்குடம்	பொன்னால் செய்த குடம்	'ஆல்' எனும் 3ஆம் வேற்றுமை உருபும் 'செய்த' எனும் வேறொரு சொல்லும் மறைந்துள்ளன.
கோழித்தீனி	கோழிக்கு உரிய தீனி	'கு' எனும் 4ஆம் வேற்றுமை உருபும் 'உரிய' எனும் வேறொரு சொல்லும் மறைந்துள்ளன.
கண்ணீர்	கண்ணிலிருந்து வழியும் நீர்	'இருந்து' எனும் 5ஆம் வேற்றுமை உருபும் 'வழியும்' எனும் வேறொரு சொல்லும் மறைந்துள்ளன.
தண்ணீர்ப்பாம்பு	தண்ணீரில் வாழும் பாம்பு	'இல்' எனும் 7ஆம் வேற்றுமை உருபும் 'வாழும்' எனும் வேறொரு சொல்லும் மறைந்துள்ளன.

7.1.2 **வினைத்தொகை** **(படிவம் 4)**

- முதற்சொல் வினையடியாகவும் அடுத்து வரும் சொல் பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.
- வினைத்தொகையில் **முக்காலத்தையும் காட்டும் உருபுகள் மறைந்திருக்கும்**.

எ.கா:

வினையடி	**பெயர்ச்சொல்**	
ஊறு	காய்	ஊ**றிய** காய் (இறந்த காலம்)
		ஊறு**கின்ற** காய் (நிகழ்காலம்)
		ஊ**றும்** காய் (எதிர்காலம்)

வினையடி	**பெயர்ச்சொல்**	
குடி	நீர்	குடி**த்த** நீர் (இறந்த காலம்)
		குடி**க்கின்ற** நீர் (நிகழ்காலம்)
		குடி**க்கும்** நீர் (எதிர்காலம்)

7.1.3 **பண்புத்தொகை** **(படிவம் 4)**

- பண்பை விளக்கும் உருபுகளான **'ஆகிய', 'ஆன'** ஆகியவை சொற்றொடர்களில் மறைந்து பொருள் தருமாயின் **பண்புத்தொகை** எனப்படும்.

எ.கா: செந்தாமரை = செம்மை**யாகிய** தாமரை
வட்டக்கல் = வட்ட**மான** கல்
இன்சொல் = இனிமை**யான** சொல்

- **இரு பெயரொட்டுப் பண்புத்தொகை**
சொற்றொடர்களில் நிலைமொழியில் **சிறப்புப்பெயரும்** வருமொழியில் **பொதுப்பெயரும்** - ணைந்து **'ஆகிய' என்ற பண்பு உருபு மறைந்து ஒரே பொருள் தருமாயின்** இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

எ.கா:

தைத்திங்கள் = தை (சிறப்புப்பெயர்) + திங்கள் (பொதுப்பெயர்)
சாரைப்பாம்பு = சாரை (சிறப்புப்பெயர்) + பாம்பு (பொதுப்பெயர்)

7.1.4 **உவமைத்தொகை** **(படிவம்** 4)

- சொற்றொடரில் 'போல', 'போன்ற', 'அன்ன', 'நிகர', 'ஒப்ப' முதலிய **உவம உருபுகள் மறைந்திருந்து** பொருள் தருமாயின் உவமைத்தொகையாகும்.

  எ.கா: முத்துப்பல் (முத்துப் **போன்ற** பல்)
  மலைத்தோள் (மலை **போன்ற** தோள்)

7.1.5 **உம்மைத்தொகை** **(படிவம்** 4)

- சொற்றொடர்களில் **'உம்' என்ற இடைச்சொல் மறைந்து** பொருள் தருமாயின் உம்மைத்தொகை எனப்படும்.

  எ.கா: அண்ணன்தம்பி - (அண்ணனு**ம்** தம்பியு**ம்**)
  செடிகொடி - (செடியு**ம்** கொடியு**ம்**)
  இரவுபகல் - (இரவு**ம்** பகலு**ம்**)

7.2 **தொகாநிலைத் தொடர்** **(படிவம் 5)**

- சொற்றொடரில் உருபுகளோ சொற்களோ **மறையாமல் வெளிப்படையாக** இருந்து பொருள் தருமாயின் தொகாநிலைத் தொடர் எனப்படும்.
- தொகாநிலைத் தொடர் **ஒன்பது வகைப்படும்**.

எண்	**தொகாநிலைத் தொடர்**	**எடுத்துக்காட்டு**
1.	எழுவாய்த் தொடர்	சேவல் கூவியது.
2.	விளித் தொடர்	கண்ணா! வா
3.	வேற்றுமைத் தொடர்	உணவைச் சாப்பிட்டான்
4.	வினையெச்சத் தொடர்	கூடி மகிழ்ந்தனர்
5.	பெயரெச்சத் தொடர்	அறிந்த பெற்றோர்
6.	வினைமுற்றுத் தொடர்	அழைத்தனர் உற்றார்
7.	இடைச்சொற்றொடர்	- மற்றொன்று - அவன் தானே?
8.	உரிச்சொற்றொடர்	சாலப் பேசினாள்
9.	அடுக்குத் தொடர்	- வா! வா! - தீ! தீ!

செய்யுள்

1.0 திருக்குறள்

புகுமுக வகுப்பு

1. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (392)

பொருள்: எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

கருத்து: எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றன.

2. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்? (420)

பொருள்: செவியால் கேள்விச்சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன? உயிரோடு வாழ்ந்தாலும் என்ன?

கருத்து: நாக்கின் சுவையை உணர்வதைவிட கேள்வியாகிய அறிவுச் சுவையை உணர்வதே சிறப்பாகும்.

3. உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596)

பொருள்: எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

கருத்து: எண்ணுவதையெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும்.

4. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல். (505)

பொருள்: மக்களுடைய குணங்களாலாகிய பெருமைக்கும் குற்றங்களாலாகிய சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல்லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.

கருத்து: அவரவருடைய செயல்களே பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல்லாக அமையும்.

5. முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. (786)

பொருள்: முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.

கருத்து: உள்ளன்போடு நட்புச் செய்வதே நல்ல நட்பாகும்.

படிவம் 1

1. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (69)

பொருள்: தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுறும் தாய், தான் அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சி அடைவாள்.

கருத்து: மகன் சான்றோன் எனக் கேள்வியுறும் தாய் பெருமகிழ்ச்சி அடைவாள்.

2. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (35)

பொருள்: பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் இல்லாமல் செய்கின்ற செயல்களே நற்காரியம் எனக் கருதப்படும்.

கருத்து: பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

3. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

பொருள்: ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியானவை எவையென அறிந்து, மிகுந்திருப்பனவற்றால் அவனைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

கருத்து: ஒருவரின் குணநலன்களை ஆராய்ந்து எத்தகையோர் எனத் தீர்மானம் செய்யலாம்.

படிவம் 2

1. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (517)

பொருள்: இந்தத் தொழிலை இன்னின்ன காரணத்தால் இவன் செய்து முடிக்கத்தக்கவன் என்பதை ஆராய்ந்தறிந்து அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

கருத்து: ஒருவரின் திறமையறிந்து ஒரு பணியை மேற்கொள்ளும் பொறுப்பை வழங்க வேண்டும்.

2. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (664)

பொருள்: ஒரு செயலைச் செய்து முடித்துவிடுவதாகச் சொல்வது எல்லாருக்கும் சுலபமானது. ஆனால், அதனைச் சொன்னபடி செய்வதுதான் கடினமானது.

கருத்து: சொல்வது சுலபம்; செய்வது கடினம்.

3. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (305)

பொருள்: ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால், சினம் வாராமல் காத்துக்கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.

கருத்து: கோபம் ஒருவரை அழிக்க வல்லது.

படிவம் 3

1. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். (415)

பொருள்: வழுக்கும் சேற்று நிலத்தில் நடப்பார்க்கு ஊன்றுகோல் உதவுவதுபோல வாழ்க்கையில் வழிதவற நேரும்போது ஒழுக்கமுடையவரின் அறிவுரையானது துணை நிற்கும்.

கருத்து: வாழ்க்கையில் நெறி தவறும் சூழல் நேரும்போது சான்றோரின் அறிவுரை கைகொடுக்கும்.

2. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

பொருள்: கருத்துகளை முறையாகவும் இனிமையாகவும் சொல்லும் ஆற்றலுள்ளவர் சொன்ன வேலையை உலகத்தார் உடனே செய்வார்கள்.

கருத்து: இனிமையாகப் பேசக்கூடியவர் இடும் வேலையைப் பிறர் உடனே செய்வர்.

3. உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று. (591)

பொருள்: ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் இல்லாதவர்கள் எவ்வகைச் செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள்.

கருத்து: ஊக்கம் உடையவர்கள் எல்லாம் உடையவர்கள் ஆவர்.

படிவம் 4

1. எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (426)

பொருள்: உலகப்போக்கு எப்படி இருக்கின்றதோ, அந்த உலகத்தோடு பொருந்திய வகையில் நாமும் அதைக் கடைப்பிடித்து அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

கருத்து: உலகத்தோடு பொருந்தி வாழ்வது அறிவாகும்.

2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

பொருள்: படிக்கப் படிக்க ஒரு நயமான நூலின் சிறப்பு அதிகரிப்பதுபோல, நல்ல குணமுடையவர்களின் நட்பு பழகப் பழக இன்பத்தை அதிகரிக்கும்.

கருத்து: நற்பண்புடையவர்களின் நட்பு பெரும் பயன் தரும்.

3. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (594)

பொருள்: சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் செல்வமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

கருத்து: ஊக்கம் உடையவனிடம் செல்வம் தானே வந்து சேரும்.

படிவம் 5

1. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (605)

பொருள்: காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், அளவுக்கு அதிகமான தூக்கம் ஆகிய நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

கருத்து: காலம் கடத்துதல், மறதி, சோம்பல், அதிக தூக்கம் ஆகியவை ஒருவரின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும்.

2. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. (784)

பொருள்: ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழ்வதற்காக மட்டும் அல்ல நட்பு; நட்பு என்பது ஒருவர் குற்றம் செய்யும் போது அதை எடுத்துக்காட்டி, இடித்துக்கூறி தீமையை விளக்குவதேயாகும்.

கருத்து: தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதே உண்மையான நட்பு ஆகும்.

3. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (987)

பொருள்: தமக்குத் துன்பம் செய்தவருக்கும் இன்பமே செய்யாவிடின் சான்றாண்மை என்ற பெருங்குணம் இருந்தும் பயனில்லை.

கருத்து: தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்வதே சான்றோரின் பண்பு.

2.0 பல்வகைச் செய்யுள்

புகுமுக வகுப்பு

1. **நாலடியார் (சமண முனிவர்)**

கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

படிப்பில்லாதவர்கள் என்றாலும் படித்தறிந்த பெரியோர்களுடன் சேர்ந்து பழகினால், அவர்களுக்கும் அப்பெரியோர் சேர்க்கையால் கொஞ்சம் கொஞ்சமாக நல்லறிவு வாய்க்கப் பெறும். எப்படி என்றால், சிறந்த அழகும் மணமும் நிறைந்த பாதிரிப்பூ வைத்திருந்த புதிய மண் பாண்டத்தில் உள்ள தண்ணீருக்கும் அதன் மணம் கிடைப்பது போல.

2. **மூதுரை (ஔவையார்)**

கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

தகுந்த கல்வி அறிவு இல்லாதவன் கற்றவனைப் போல் பாசாங்கு செய்வது எப்படி இருக்கிறது என்றால், அழகான தோகையை விரித்து ஆடும் வண்ணமயிலைப் பார்த்து, வான்கோழியானது அதன் சிறகை விரித்து, மயில் என்பதாக நினைத்து ஆடுவதைப் போலாகும். கல்லாதவன் கற்றவனைப்போல் நடிக்கலாம். நடித்தாலும் அது சிறப்பைத் தராது. கல்வியின்மை வெளிப்பட்டுவிடும்.

படிவம் 1

1. **மூதுரை (ஔவையார்)**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

ஒரு நாட்டின் மன்னனைவிடக் கற்றறிந்தவனே சிறந்தவனாகக் கருதப்படுகின்றான். ஏனெனில், அம்மன்னனுக்கு அவன் நாட்டில் மட்டுமே சிறப்புக் கிட்டும். ஆனால், கற்றறிந்தவர்கள் செல்லுகின்ற இடத்திலெல்லாம் சிறப்புப் பெறுவர்.

2. **திருமுறை (திருநாவுக்கரசர்)**

விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

விறகில் தீயும், பாலில் நெய்யும் மறைந்திருப்பது போல மிகப்பெரிய மாணிக்கத்தைப் போன்ற பேரொளியாகிய இறைவன் எங்கும் எதிலும் மறைந்துள்ளான். அவன்பால் உறவு எனும் கோலை ஊன்றி, உணர்வெனும் கயிற்றினால் மன உறுதியோடு பக்தி செலுத்தினால், பாலைக் கடையும்போது நெய் வெளிப்படுவது போல இறையருள் வெளிப்படும்.

படிவம் 2

1. **நாலடியார் (சமண முனிவர்)**

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் – வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

பண்பில் சிறந்த பெரியோரிடம் கொண்ட நட்பு வளர்பிறை போல் ஒவ்வொரு நாளும் முறையே வளரும். ஆனால், தீய குணங்களைக் கொண்ட சிறியோரின் நட்பு, தேய்பிறை போன்று நாளுக்கு நாள் குறையும்.

2. **நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் (பொய்கையாழ்வார்)**

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

இறைவனின் அருளைப் பெறத் தடையாக உள்ள துன்பங்கள் நீங்க பூமியை அகல் விளக்காகவும் கடலை அகல் விளக்குக்கு நெய்யாகவும் சூரியனை விளக்கின் சுடரொளியாகவும் பாவித்து ஒளி வீசும் சக்கரத்தைக் கையில் ஏந்திய திருமாலின் திருவடிகளுக்குப் பாமாலையைச் சூட்டுகிறேன்.

படிவம் 3

1. **அறநெறிச்சாரம் (முனைப்பாடியார்)**

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

மனிதப் பிறப்பில் கற்க வேண்டியதைக் கற்க வேண்டும். கற்றறிந்த அறிஞர்களின் அரிய கருத்துகளைக் கேட்க வேண்டும். கேட்ட கருத்துகளின்படி வாழ்க்கையில் நடக்கவும் வேண்டும். இவ்வாறு செய்வதன்வழி உலகில் உள்ள மற்ற எந்தப் பிறப்புகளையும்விட மனிதப் பிறப்புச் சிறப்பானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமையும்.

2. **திருவருட்பா (இராமலிங்க அடிகள்)**

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்

ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவே எனக்கு வேண்டும். உள்ளத்திலொன்றும் புறத்திலொன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு என்னை அடையாதவாறு காக்க வேண்டும். பெருமை சான்ற நினது புகழையே நான் பேசுபவனாகவும் பொய்மை மொழிகளைப் பேசாதவனாகவும் இருக்க வேண்டும்.

படிவம் 4

1. **விவேக சிந்தாமணி**
(புத்திக்கூர்மை)

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தேதீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல.

புத்தியுள்ளவன் பலமுள்ளவன் ஆவான். வலிமை உள்ளவனுக்குப் புத்தியில்லாவிட்டால் எந்த விதத்திலும் துன்பம் வந்தே தீரும். சிறுமுயல் ஒன்று தன் அறிவுடைமையினால் பலம் வாய்ந்த சிங்கம் ஒன்றை அழைத்துச் சென்று அதனுடைய பிம்பத்தையே கிணற்றினுள் காட்டி அதைக் கொன்றதைப் போன்று பலமற்றவர் தன் அறிவுக்கூர்மையால் பலமுள்ளவர்களையும் வெல்லலாம்.

2. **நளவெண்பா (புகழேந்திப் புலவர்)**
(நளனது நல்லாட்சி)

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் – மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு.

குளிர்ந்த நிலவு போன்ற வெண்கொற்றக் குடை நிழலில் வீற்றிருக்கின்ற நளமன்னன் மகரந்தப்பொடி சிந்துகின்ற மலர்மாலையை அணிந்தவன் ஆவான். அவன் சிறந்த அறங்கள் நிலைத்து நிற்கும் வகையில் தன் நாட்டைத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஆண்டு வந்தான். அவன் நாட்டில் பெண்கள் பாலும் பழமும் ஊட்டி வளர்க்கும் மென்மை குணமுடைய பச்சைக்கிளியும் போராட்ட குணமுடைய வலிய பருந்தும் பகைமை நீங்கி ஒரே கூட்டிற்குள் வாழும் நிலை உள்ளது.

3. **குறுந்தொகை (தேவகுலத்தார்)**
(அன்பின் பெருமை)

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

மலைச் சாரலில் உள்ள கரிய கிளைகளில் பூத்துக்குலுங்கும் குறிஞ்சி மலர்களின் தேனைக் கொண்டு தேனீக்கள் பெரிய தேனடைகளைக் கட்டும் சிறந்த நாட்டைச் சார்ந்தவன் என் தலைவன். அவனுடன் நான் கொண்ட அன்பானது பூமியைவிட பெரியது; வானத்தைவிட உயர்ந்தது; கடலைவிட ஆழமானது.

4. **சிலப்பதிகாரம் (இளங்கோவடிகள்)**
(கற்புத் தெய்வம்)

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடித்,
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!

இங்கு என்னோடு வந்துள்ள இளங்கொடி போன்ற பெண்ணாகிய கண்ணகியின் அழகிய சிறிய அடிகளை இதற்கு முன்னர் நிலமகளும் அறிந்திருக்கவில்லை. தன் கணவன் பொருட்டு, கடுங்கதிர் வெயிலால் நடுங்கத்தக்க துயரத்தை அடைந்து, நாவும் உலர்ந்துபோக வாட்டமுற்றாலும் தனது வழிநடைத் துன்பத்தைச் சிறிதும் உணராத பூங்கொடி போன்றவள் இவள். கணவர்க்கு இனிய துணையாக விளங்கும் பெண்களுக்கு இன்றியமையாததான கற்பைக் கடமையாக மேற்கொண்ட இவளைப் போன்ற பொலிவினையுடைய தெய்வத்தை நான் கண்டதில்லை.

படிவம் 5

1. **கம்ப இராமாயணம் (கம்பர்)**
(இயற்கை இன்பம்)

குயிலினம் வதுவை செய்ய,
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்கு அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

குயிலினம் தம் இணைகளோடு சேர்ந்திருக்கவும் கூர்விழியுடைய நாட்டியப் பெண்கள் ஆடலரங்கத்திற்கு அழகு செய்ய ஆடுவதைப் போன்று மயில்கள் மரக்கிளைகளில் நாட்டியமாடவும் நெருங்கிய சிறகுகளையுடைய அன்னப்பறவையானது தாமரை மலர்களினின்றும் துயில் எழவும் அக்காலை வேளையில் வண்டுகள் உதயராகம் பாடவும் உடைய சோலை.

2. **புறநானூறு (கணியன் பூங்குன்றனார்)**
(பெரியோர் சிறியோர்)

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னா தென்றலும் இலமே; ‘மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம்’ என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

எல்லா ஊரும் எமக்குச் சொந்தமான ஊரே. எல்லாரும் எம் சுற்றத்தார்களே. எமக்கு உண்டாகும் துன்பமும் நன்மையும் பிறர் கொடுப்பதால் வருவன அல்ல. அனைத்தும் நம்மாலேயே விளைவனவாகும். உலகத்தில் இறத்தல் என்பது புதுமையானது அன்று. கருவில் தோன்றிய நாள் முதல் இறப்பு என்பது தீர்மானிக்கப்பட்டுவிட்டது. வாழ்க்கை இனிதென்று மகிழ்ந்ததும் இல்லை; ஒரு வெறுப்பு வந்ததும் வாழ்க்கை துன்பமானது என்று ஒதுக்குதலும் இல்லை. மின்னலினால் பெருமழை தோன்றும். அதன் பயனால் ஆறு கல்லை உருட்டி ஒலிக்கும். அது போன்றே, பெரிய ஆற்றில் செல்லும் மிதவை போல இவ்வுயிரானது ஊழ்வினை செலுத்தும் வழியில் செல்வதாகும் என்பதைச் சான்றோரின் காட்சியால் தெளிவு பெற்றேன். ஆகையால், சிறப்புடைய பெருமை விளங்கும் மாந்தரைக் கண்டு பாராட்டுதலும் இல்லை. சிறுமையுடையோராய்த் தாழ்ந்து அழிபவர்களைக் கண்டு இகழ்ந்து தூற்றுதலும் இல்லை.

3. **தொல்காப்பியம் (தொல்காப்பியர்)**
(உயிர்களின் பகுப்பும் சிறப்பும் மரபும்)

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

ஓரறிவு பெற்ற உயிர் என்பது உடம்பினால் அறியும் இயல்பு உடையது. இரண்டறிவு பெற்ற உயிர் என்பது, உடம்பினாலும் வாயினாலும் அறியும் இயல்பு உடையது. மூன்றறிவு பெற்ற உயிர் என்பது, உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் அறியும் இயல்பு உடையது. நான்கறிவு பெற்ற உயிர், உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணாலும் அறியும் இயல்பு உடையது. ஐந்தறிவு பெற்ற உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணாலும் செவியாலும் அறியும் இயல்பு உடையது. ஆறறிவு பெற்ற உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணாலும் செவியினாலும் மனத்தினாலும் அறியும் இயல்பு உடையது என மரபுகளை நேர்மை பெற உணர்ந்தவர்கள் நெறிப்படுத்தியுள்ளனர்.

மொழியணி

1.0 இரட்டைக்கிளவி

படிவம் 1

1. கடகட - விரைவாகச் செய்தல்

   எ.கா: ஆசிரியர் கற்பித்த செய்யுளை மாணவன் மனனம் செய்து **கடகட**வென ஒப்புவித்தான்.

2. கிடுகிடு - அதிர்வு / நடுக்கம், விரைவு (விலை)

   எ.கா: நிலநடுக்கத்தின் போது கட்டடங்கள் **கிடுகிடு**வென ஆட்டங்கண்டன.

3. வெடவெட - குளிர் அல்லது பயத்தினால் நடுங்குதல்

   எ.கா: மழையில் நனைந்த நளினா குளிரால் **வெடவெட**வென நடுங்கினாள்.

4. நசநச - ஈரத் தன்மை கொண்டிருத்தல்

   எ.கா: கடுமையான உடற்பயிற்சிக்குப் பிறகு வியர்வை வெளியாகி என் உடல் **நசநச**வென்றிருந்தது.

படிவம் 2

1. விறுவிறு - விரைவாக

   எ.கா: வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த அமலா, மழை பெய்யத் தொடங்கியதால் வீட்டை நோக்கி **விறுவிறு**வென நடந்தாள்.

2. சடசட - கடுமையான ஓசை

   எ.கா: கடுங்காற்று வீசியதால் மாமரத்தின் கிளை **சடசட**வென முறிந்து விழுந்தது.

3. தொணதொண - வெறுப்பு உண்டாக்கும்படி ஓயாமல் பேசுவது

   எ.கா: அதிகம் பேச விரும்பாதவர்கள் **தொணதொண**வெனப் பேசிக் கொண்டிருப்பவர்களைக் கண்டு ஒதுங்குவது இயல்பாகும்.

4. திமுதிமு - பலரோ மிருகங்களோ கூட்டமாகச் செல்லுதல்

எ.கா: தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும் தொழிற்சாலையிலிருந்து தொழிலாளர்கள் **திமுதிமு**வென வெளியேறினர்.

படிவம் 3

1. சிலுசிலு - குளிர்ச்சித்தன்மை

எ.கா: கேமரன் மலையில் **சிலுசிலு**வென்று வீசிய மென்குளிர்க் காற்று உடலைச் சிலிர்க்கச் செய்தது.

2. பரபர - அவசர அவசரமாகச் செய்தல்

எ.கா: தாமதமாக எழுந்த செந்தில் **பரபர**வெனக் காலைக் கடன்களை முடித்துப் பள்ளிக்கு ஓடினான்.

3. துருதுரு - எப்பொழுதும் துடிப்பாகச் செயல்படுதல்

எ.கா: **துருதுரு**வென அங்குமிங்கும் ஓடியாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. தளதள - பயிர் செழிப்பாகக் காணப்படும் நிலை

எ.கா: நன்கு நீரூற்றி உரமிட்ட மல்லிகைச் செடிகள் **தளதள**வெனச் செழிப்பாக வளர்ந்திருந்தன.

2.0 இணைமொழி

புகுமுக வகுப்பு

1. ஆற அமர - நிதானமாக / பரபரப்பின்றி
2. இரவு பகல் - ஓய்வில்லாமல் / தொடர்ந்து
3. சொத்து சுகம் - வசதியுடன்
4. குற்றம் குறை - தவறும் குறையும்
5. உற்றார் உறவினர் - நெருக்கமானவர்களும் சுற்றத்தாரும்

படிவம் 1

1. அகமும் புறமும் - மன உணர்வும் வெளித்தோற்றமும்
2. உயர்வு தாழ்வு - பாகுபாடு / வேறுபாடு
3. கள்ளங் கபடு - வஞ்சக எண்ணம்
4. தங்கு தடை - தடைகள் / இடையூறு / குறுக்கீடு
5. நோய் நொடி - பிணி / வியாதி / நலக்கேடு

படிவம் 2

1. ஆடிப்பாடி - மகிழ்ச்சியுடன்
2. சட்ட திட்டம் - விதிமுறைகள்
3. உள்ளும் புறமும் - எண்ணத்திலும் செயலிலும் / உள்ளேயும் வெளியேயும்
4 வாடி வதங்கி - உலர்ந்து
5. நாணிக் கோணி - மிகவும் வெட்கப்பட்டு

படிவம் 3

1. ஏழை எளியவர் - வறியவர் / பொருளாதாரத்தில் நலிவுற்றவர்
2. ஊண் உறக்கம் - உணவும் தூக்கமும்
3. சீரும் சிறப்பும் - மேன்மை / உன்னதநிலை / ஏற்றம் மிகுந்த
4. ஈடு இணை - ஒப்பு
5. அடக்க ஒடுக்கம் - பணிவு

படிவம் 4

1. அக்கம் பக்கம் - அருகருகே / குறிப்பிட்ட இடத்தைச் சுற்றியுள்ள பகுதி / சுற்றுமுற்றும்
2. அரிய பெரிய - அரியதும் பெரியதுமான / அபூர்வமான
3. இன்ப துன்பம் - சுக துக்கம் / மகிழ்வும் துயரமும்
4. கால நேரம் - தக்க சமயம்
5. சாக்குப் போக்கு - பொய்யான காரணம்

படிவம் 5

1.	சீராட்டிப் பாராட்டி	-	போற்றிப் புகழ்ந்து
2.	விருப்பு வெறுப்பு	-	பிடித்ததும் பிடிக்காததும் / உவத்தல் காய்தல்
3.	சண்டை சச்சரவு	-	தகராறு / அடிதடி
4.	தயவு தாட்சணியம்	-	இரக்கம்
5.	ஆதி அந்தம்	-	தொடக்கமும் முடிவும்

3.0 உவமைத்தொடர்

புகுமுக வகுப்பு

1. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல
   - செய்வதறியாது தவித்தல்

2. கீரியும் பாம்பும் போல
   - பகைமையுடன் இருத்தல்

3. ஒளியைக் கண்ட இருள் போல
   - துன்பம் நீங்குதல்

4. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல
   - துன்பத்துக்குமேல் துன்பம்

5. கருடனைக் கண்ட பாம்பு போல
   - பய உணர்வு

படிவம் 1

1. மணியும் ஒலியும் போல
   - இணைந்தே இருப்பது / விட்டுப் பிரியாமை

2. இலைமறை காய் போல
   - ஆற்றல் வெளிப்படாமல் மறைந்திருத்தல்

3. பசுமரத்தாணி போல
   - மனத்தில் ஆழமாகப் பதிதல்

4. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல
   - எதிர்பார்த்ததைவிட எளிதாக, இனிய முறையில் நடந்தேறுதல் / இன்பத்துக்குமேல் இன்பம்

5. தாயைக் கண்ட சேயைப் போல
   - பிரிவுக்குப் பிறகு சந்திப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி

படிவம் 2

1. உள்ளங்கை நெல்லிக்கனி போல
   - மிகவும் தெளிவாகத் தெரிதல்

2. நுனிப்புல் மேய்ந்தாற் போல
   - ஒன்றைப் பற்றி மேலோட்டமாக மட்டும் தெரிந்து கொள்ளுதல்

3. புற்றீசல் போல
   - கூட்டமாக / அதிகமாக

4. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல
   - யாரைச் சந்திக்கவேண்டும் என்று நினைக்கிறோமோ அவரே எதிரில் வருதல்

5. அழகுக்கு அழகு செய்வது போல
   - அழகான ஒன்றுக்கு மேலும் அழகு சேர்த்தல்

படிவம் 3

1. தூண்டில்காரனுக்குத் தக்கை மேல் கண் போல
   - தன் செயலில் கவனமாயிருத்தல் / குறியாயிருத்தல்

2. மலரும் மணமும் போல
   - விட்டுப்பிரியாமை / சேர்ந்தே இருத்தல்

3. வேலியே பயிரை மேய்ந்தாற்போல
   - காக்க வேண்டியவரே துரோகம் செய்தல்

4. இலவு காத்த கிளி போல
   - உறுதியாகக் கிடைக்குமென்று காத்திருந்து ஏமாற்றமடைதல்

5. ஊமை கண்ட கனாப் போல
   - வெளியே சொல்ல முடியாமை

படிவம் 4

1. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல
   - துன்பத்துக்குமேல் துன்பம்

2. இருதலைக் கொள்ளி எறும்பு போல
   - எந்தப் பக்கமும் சாரமுடியாத இக்கட்டான நிலை

3. நீர்மேல் எழுத்துப் போல
   - நிலையாமை

4. யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல
   - ஒரு பொருள் சேதமடைவதைத் தடுக்க முடியாமை/ பாதிப்பு ஏற்படுவது உறுதி

5. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல
   - நல்ல நிலையில் உள்ள ஒன்றிற்கு மெல்ல மெல்ல கேடு விளைவித்தல்

படிவம் 5

1. விழலுக்கு இறைத்த நீர் போல
   - பயனற்ற உழைப்பு

2. கொழு கொம்பற்ற கொடி போல
   - ஆதரவு இல்லாத நிலை

3. சிறகு இழந்த பறவை போல
   - செயல் இழந்து நிற்கும் நிலை

4. மாலுமி இல்லாத கப்பல் போல
   - முறையான வழிகாட்டல் இல்லாமை/ தலைமைத்துவம் இல்லாமை

5. நீறு பூத்த நெருப்புப் போல
   - சினம், பகை போன்ற உணர்ச்சிகளை வெளியே காட்டிக்கொள்ளாமை

4.0 மரபுத்தொடர்

புகுமுக வகுப்பு

1. குரங்குப்பிடி - பிடிவாதம்
2. இரண்டெட்டில் - விரைவில்
3. பற்ற வைத்தல் - பகை மூட்டுதல்
4. இடைவிடாமல் - தொடர்ந்து / தடையில்லாமல்
5. கை தவறுதல் - தொலைந்து போதல்

படிவம் 1

1. வாழையடி வாழை - தலைமுறை தலைமுறையாக
2. வெட்டிப் பேச்சு - வீண் பேச்சு / பயனற்ற பேச்சு
3. அரைப்படிப்பு - முழுமையற்ற படிப்பு / நிரம்பாக் கல்வி
4. தோள் கொடுத்தல் - உதவி செய்தல் / துணையாக இருத்தல்
5. ஏட்டிக்குப் போட்டி - எதிருக்கெதிராகச் செயல்படுதல் / விதண்டாவாதம்

படிவம் 2

1. வீடு வாசல் - சொத்துகள் (குறிப்பாக வீடு) / குடும்பமும் குடும்பப் பொறுப்பும்
2. உச்சி குளிர்தல் - பெரும் மனமகிழ்ச்சி அடைதல்
3. எள்ளளவும் - சிறிதளவும் / கிஞ்சிற்றும்
4. பாட்டு வாங்குதல் - திட்டப்படுதல் / ஏசப்படுதல்
5. அளவளாவுதல் - கலந்துபேசுதல் / கூடிப்பேசுதல்

படிவம் 3

1. உடும்புப்பிடி - கொண்ட எண்ணம், கருத்து முதலியவற்றில் விடாப்பிடியாக / உறுதியாக இருத்தல்
2. இடித்துரைத்தல் - கண்டித்துக் கூறுதல்
3. ஈயாடவில்லை - அவமானத்தால் ஏற்படும் மகிழ்ச்சியின்மை
4. தலை வணங்குதல் - உரிய முறையில் மதித்தல் / மதிப்புத் தருதல்
5. கானல் நீர் - நிறைவேறாத எண்ணம்

படிவம் 4

1.	நிறை குடம்	-	அதிகம் தெரிந்திருந்தும் அடக்கமாக இருத்தல்
2.	கருணைக் கடல்	-	இரக்கம் மிகுந்தவர் / பரிவுமிக்கவர்
3.	சாயம் வெளுத்தது	-	உண்மை வெளிப்படுதல்
4.	காதில் பூ வைத்தல்	-	முட்டாளாக்குதல் / ஏமாற்றுதல்
5.	தட்டிக் கொடுத்தல்	-	உற்சாகப்படுத்துதல் / ஊக்கப்படுத்துதல்

படிவம் 5

1.	வெள்ளிடைமலை	-	மிகவும் வெளிப்படையாகத் தெரிவது / தெளிவாகப் புலனாவது
2.	இனிப்புக் காட்டுதல்	-	ஆசை வார்த்தை கூறுதல்
3.	ஒத்துப் பாடுதல்	-	பிறர் கூறுவதற்கெல்லாம் ஆமோதித்தல்
4.	நெளிவு சுளிவு	-	நுணுக்கங்கள் / யுக்தி
5.	ஓய்வு ஒழிச்சல்	-	மிகக் குறைந்த நேர ஓய்வு

5.0 பழமொழி

புகுமுக வகுப்பு

1. ஒற்றுமையே பலம்.
   ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாது புரிந்துணர்வோடு ஒன்றுபட்டு வாழ்வதே நலம் பயக்கும்.

2. சுத்தம் சுகம் தரும்.
   நாம் தூய்மையைக் கடைப்பிடித்தால் நோயின்றி நலமாக வாழலாம்.

3. பருவத்தே பயிர் செய்.
   செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும்.

4. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
   தன்னிடமுள்ள ஒன்றின் சிறப்பினை உணராமல் பிறிதொன்றின் வெளித்தோற்றத்தில் மயங்கி அதனை உயர்வாகக் கருதுவதால் பயன் கிடையாது.

5. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
   கல்வியில் திறமையும் புலமையும் உள்ள ஒருவர் எங்குச் சென்றிடினும் சிறப்பிக்கப்படுவார்.

படிவம் 1

1. ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்.
   தம் குறையையும் இயலாமையையும் சொல்லத் துணிவு இல்லாமல், அதற்காக மற்றவரையும் மற்றவற்றையும் குறை கூறுவர்.

2. கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்.
   பல நூல்களைப் படிப்பதனால் அறிஞனாகத் திகழலாம்.

3. தன் கையே தனக்கு உதவி.
   ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையும் சுயமுயற்சியும் வேண்டும். பிறர் உதவியை எதிர்பார்த்து வாழக்கூடாது.

4. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
   ஒருவர் இளமையில் கைகொள்ளும் பழக்கவழக்கங்கள் அவரின் வாழ்நாள் முழுவதும் தொடரும்.

5. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.
   ஒவ்வொரு காசையும் கவனத்துடன் சேமித்து வந்தால் நாளடைவில் பெருந்தொகையாகிவிடும்.

படிவம் 2

1. ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
   ஆலமர, வேப்பமரக் குச்சியைக் கொண்டு பல் துலக்கினால் பல் உறுதியாக இருக்கும். நான்கடி கொண்ட நாலடியாரையும் இரண்டடி கொண்ட திருக்குறளையும் நன்முறையில் ஓதினால் சொல்வன்மை பெருகும்.

2. மந்திரத்தால் மாங்காய் விழுந்திடுமா?
   வாழ்க்கையில் நாம் நினைத்ததை அடைய பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

3. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
   உயர்ந்த பண்புள்ளவர்கள் சிறந்த காரியங்களையே செய்வார்களேயன்றி, எந்நிலையிலும் தங்களுக்கு இழிவு தரக்கூடிய காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

4. அடாது செய்பவன் படாது படுவான்.
   தகாத செயல்களைச் செய்பவர்கள் அதற்குரிய தண்டனைகளைப் பெற்றே தீருவர்.

5. இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை.
   இளமையில் சோம்பல்கொண்டு உழைக்காமல் இருந்தால், முதுமையில் வறுமையில் வாட நேரிடும்.

படிவம் 3

1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
   நடந்து முடிந்த ஒரு காரியத்தை அல்லது கைவிட்டுப்போன ஒரு பொருளை நினைத்து வருந்திப் பயனில்லை.

2. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
   தொடர்ந்து ஒரு செயலைச் செய்து வந்தால் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாளடைவில் மிகவும் எளிதாகிவிடும்.

3. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
   எச்செயலைச் செய்தாலும் தன் நோக்கத்தில் வெற்றி பெறுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

4. அற்ப அறிவு ஆபத்துக்கிடம்.
   நமக்குப் போதிய அறிவு இருத்தல் அவசியம். குறைவான அறிவு ஆபத்துக்கு வழிவகுத்துவிடும்.

5. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
   பிள்ளையின் மீது கொண்ட தீராத அன்பினால், தாய் தன் பிள்ளை செய்யும் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு அன்பு காட்டுவாள். ஆனால், பிள்ளைக்குத் தாயைப் போல இளகிய மனம் இருப்பதில்லை.

படிவம் 4

1. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
   கடல் கடந்து சென்றும் செல்வம் தேட வேண்டும்.

2. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
   கடுகு அளவில் சிறிதானாலும் அதனிடம் இயற்கையாகவே இருக்கின்ற காரம் போகாது. அதுபோல சிலர் உருவத்தில் சிறிதாக இருந்தாலும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள்.

3. ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்.
   குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையோடு செயல்படாவிட்டால் அழிவுக்கு வழிவகுத்து விடும்.

4. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு.
   நாம் கற்றறிந்தது மிகச்சிலவே; இன்னும் கற்க வேண்டியவை நிறைய உள்ளன.

5. குந்தித் தின்றால் குன்றும் மாளும்.
   சம்பாதித்ததை மேலும் விருத்தி பண்ணாமல் சும்மாயிருந்து எடுத்துச் செலவு செய்தால், குன்று போல குவிந்திருந்த செல்வமும் நாளடைவில் இல்லாமல் போகும்.

6. அகல உழுவதினும் ஆழ உழுவது மேல்.
   மேலோட்டமாகப் பலவற்றை அறிந்து கொள்வதைக் காட்டிலும் ஒரு துறையில் ஆழமான அறிவைப் பெறுவதே சிறப்பு.

7. தீட்டின மரத்திலே கூர் பார்ப்பதா?
   நமக்கு நன்மை செய்தவருக்கு நாம் தீமை செய்யக்கூடாது.

8. ஆடிக்கறப்பதை ஆடிக்கற பாடிக்கறப்பதைப் பாடிக்கற.
   ஒருவரிடமிருந்து நாம் ஒன்றைப் பெற விரும்பினால் அவருக்கு ஏற்ற வழியிலேயே அணுகி அல்லது செயல்பட்டு அதைப் பெற வேண்டும்.

9. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
   துன்பத்திலிருந்து மீள வழி தெரியாதவருக்கு ஆண்டவன்தான் துணை.

10. நொறுங்கத் தின்றால் நூறு வயது.
    உணவை நன்கு மென்று தின்றால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

படிவம் 5

1. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்.
   நமக்குத் தேவையான செல்வம், அறிவு, அனுபவம் போன்றவற்றை முன்கூட்டியே பெற்றிருந்தால்தான் அவை நம் தேவைக்குப் பயன்படும்.

2. தர்மம் தலை காக்கும்.
   நாம் செய்கின்ற அறச்செயல்கள் நமக்குத் துன்பம் நேர்கின்ற பொழுது நம்மைக் காத்து நிற்கும்.

3. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.
   சிறந்த பண்புடையவரோடு சேரும் ஒருவர் அப்பண்பாளரின் தன்மைகளைப் பெற்று விளங்குவார்.

4. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
   முன்னர் நாம் செய்த செயலின் பலனைப் பின்னர் நாம் அடைவது உறுதியாகும். நன்மை செய்யின் நன்மை விளையும்; தீமை செய்யின் தீமை விளையும்.

5. தன் உயிரைப்போல் மன்னுயிரையும் நினை.
நாம் நம் உயிரை எவ்வாறு போற்றிப் பாதுகாக்கின்றோமோ, அவ்வாறே உலகில் உள்ள எல்லா உயிர்களையும் மதிக்க வேண்டும்.

6. துணை போனாலும் பிணை போகாதே.
நம்மிடம் உதவி கேட்கும் ஒருவருக்கு உதவுவதில் தவறில்லை. ஆனால், அவர் உதவி பெறும் பொருட்டுப் பிறரிடம் அவருக்காகப் பிணையாளியாக இருக்கக்கூடாது.

7. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
வெளித்தோற்றத்தைக் கண்டு ஒன்றைச் சிறந்ததென எண்ணி ஏமாந்துவிடக்கூடாது.

8. மனக்கவலை பலக் குறைவு.
கவலைமிக்க மனத்தை உடையவரின் உடல் சோர்வடைவதால் ஒரு செயலை முனைப்புடன் செய்ய இயலாது. ஆகவே, மனக்கவலை உடையவர் வலுவிழந்தவராகவே கருதப்படுவார்.

9. சைகை அறியாதவன் சற்றும் அறியான்.
செய்கையைக் கொண்டோ முகத்தோற்றத்தைக் கண்டோ ஒருவரின் கருத்தை அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்துகொள்ள முடியாதவர் எதையும் அறிந்துகொள்ள முடியாதவரே ஆவார்.

10. கெடுவான் கேடு நினைப்பான்.
மற்றவர்களுக்குத் தீங்கு செய்ய எண்ணுபவன் தானே அதற்கேற்ற பயனை அடைவான்.

மேற்கோள் நூல்கள்

ஆசிரியர் குழு, (1996) **இலக்கண இலக்கிய விளக்கவுரை**, கோலாலம்பூர்: ஸ்ரீ கோத்தா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

ஆசிரியர் குழு, (1997) **தற்காலத் தமிழ் மரபுத்தொடர் அகராதி,** சென்னை: மொழி கலாச்சார வளமேம்பாட்டு அறக்கட்டளை.

ஆசிரியர் குழு, (2002) **தமிழ் மொழி இலக்கண இலக்கிய வழிகாட்டி நூல்**, புக்கிட் மெர்தாஜம்: துவாங்கு பைனுன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

இராமநாத பிள்ளை. ப, (1961) **பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு**, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

இராமலிங்கம் பிள்ளை, (1999) **திருக்குறள் எளிய உரை**, சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.

கலியாணசுந்தர ஐயர், (1949) **கம்ப ராமாயணம் (பால காண்டம்)**, சென்னை: ஸ்ரீ ரங்கா அச்சுக்கூடம்.

கழகப்புலவர் குழு, (1984) **கட்டுரை நண்பன்,** சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

கழகப்புலவர் குழு, (1990) **நன்னூல் காண்டிகை உரை (எழுத்ததிகாரம்),** சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

கோவிந்தராசன். சி.ர, (2002) **நீதி நூல் அறநெறிச்சாரம் மூலமும் உரையும்**, சென்னை: இந்து பப்ளிகேஷன்ஸ்.

சண்பகம். சு, (1993) **நீதிநூல் களஞ்சியம்**, சென்னை: திருமகள் நிலையம்.

சுப்பிரமணியன். ச.வே, **சிலப்பதிகாரம் தெளிவுரையும் ஆய்வுக் குறிப்புகளும்**, சென்னை: புத்தக நிலையம்.

சுப்பு ரெட்டியார். ந, (2002) **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை**, சென்னை: பழனியப்பா பிரதர்ஸ் கோனார் மாளிகை.

தமிழ்ப் பாதுகாப்பு கழகத்தார், (1980) **தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு**, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், சென்னை.

துரை இராசாராம், **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** (மூலமும் தெளிவுரையும் நான்காம் ஆயிரம்), சென்னை: முல்லை நிலையம்.

துரைசாமிப் பிள்ளை. சு, **திருவருட்பா (மூலமும் உரையும் ஒன்பதாம் தொகுதி)**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நாகராசன். வி, **குறுந்தொகை மூலமும் உரையும்**, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

நாராயணசாமி, T.P, (1960) **அறநூற் கொத்து**, கோலாலம்பூர்: மனோன்மணி விலாஸ்.

பத்மதேவன், (2008) **விவேக சிந்தாமணி மூலமும் உரையும்**, சென்னை: கற்பகம் புத்தகாலயம்.

பரந்தாமனார். அ.கி, (2002) **நல்ல தமிழ் எழுத வேண்டுமா?,** சென்னை: பாரி நிலையம்.

பாலசுந்தரம் பிள்ளை. தி.சு, (1964) **பதினெண் கீழ்க்கணக்கு நாலடியார்**, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

புலியூர்க் கேசிகன், (1978) **நளவெண்பா**, சென்னை: பாரி நிலையம்.

புலியூர்க் கேசிகன், (1995) **புறநானூறு**, சென்னை: பாரி நிலையம்.

மாணிக்கவாசகன். ஞா, (2002) **சிலப்பதிகாரம் தெளிவுரை**, சென்னை: உமா பதிப்பகம்.

மாரிமுத்து. ஆ, (1994) **நீதி நூற் கொத்து**, சென்னை: மணிமேகலை பிரசுரம்.

முனுசாமி. வீ, (1989) **திருக்குறள் தெளிவுரை,** சென்னை: வானதி பதிப்பகம்.

வரதராசன். மு, (2002) **திருக்குறள் தெளிவுரை**, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

வேலுசுவாமி. சி, (1996) **பழமொழி விளக்கமும் இலக்கணச் சுருக்கமும்,** கோலாலம்பூர்: திருமகள் வெளியீடு.

ஜகந்நாதன். கி.வா, (2001) **தமிழ்ப் பழமொழிகள்**, ஜெனரல் பப்ளிஷர்ஸ்.

ISBN 978-967-420-652-9

9 7 8 9 6 7 4 2 0 6 5 2 9

Bahagian Pembangunan Kurikulum

Kementerian Pendidikan Malaysia

Aras 4, 6-8, Blok E9, Kompleks Kerajaan Parcel E

62604 Putrajaya

Tel: 03-8884 2000 Faks: 03-8888 9917

https://bpk.moe.gov.my